பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 25,வியாழக்கிழமை 08.06.2017 | கதிர் 214

## ஜனாதிபதியின் பொசன் வாழ்த்துச் செய்தி



கொழும்பு, ஜூன் 08

இந்த உன்னத மானபொசன்பௌர் ணமி தினத்தில் மாமர நிழலில் தர்ம போதமனை களை செவிமடுத்தவர்களைப் போன்று, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் ஒழுக்கத்தைப்

பக்கம் 18 »

# வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு; கருத்தறியும் அமர்வு புதனன்று




யாழ்ப்பாணம், ஜூன் 08

**வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை அறிக்கை நேற்று மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக உறுப்பினர்களின் கருத்தறியும் விசேட அமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.**

**அன்றையதினம் இலத்திரனியல் ஊடகங்கள் சபை அமர்வை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

வடமாகாண அமைச்சர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர். தன்னிச்சையாகச் செயற்பட்டு தவறிழைத்துள்ளனர்.அதனால்அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என வடக்குமாகாணசபையின் உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்தனர்.

எதிர்க்கட்சியினர் மட்டுமன்றி ஆளும் கட்சி உறுப்பினர்களில் அதிகமானோ

பக்கம் 18 »

## விரிவுரைகளைப் பகிஷ்கரிப்போரின் மகாபொல புலமைப்பரிசில் ரத்து!

### நாடாளுமன்றில் உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு கோரி விரிவுரைகளைப் பகிஷ்கரித்துப் போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்களின் மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு இரத்துச் செய்யப்படும் என உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக 7 ஆயிரம் மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்

பக்கம் 18 »

## மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றவே அமைக்கப்பட்டது விசாரணைக் குழு!

### சபையில் அறிக்கையைச் சமர்ப்பித்து முதலமைச்சர் உரை



யாழ்ப்பாணம், ஜூன் 08

**"வடக்கு மாகாண சபைக்கு மக்கள் எம்மைத் தேர்ந்தெடுக்கும் போது எங்கள் மீது அவர்களுக்கு பல எதிர்பார்ப்புக்கள் இருந்தன. நேர்மையான, ஊழலற்ற, பக்கச் சார்பற்ற, கண்ணியமான ஒரு நிர்வாகத்தை நாம் அவர்களுக்குக் கொடுப்போம் என்ற எதிர்பார்ப்பே அது. அந்த நம்பிக்கையை மழுங்கடிக்கும் வண்ணம் நாங்கள் நடந்து கொள்ளக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தவே விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது."**

**- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாணாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.** பக்கம் 03 »

## அரசமைப்பிலும் மாற்றம் ஏதுமில்லை; பாதிக்கப்பட்ட நிலையில் தமிழ் சமூகம்

### யாழில் 17 நாடுகளின் பிரதிநிதிகளிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 08

அரசியல் ரீதியாக - சமூகம் ரீதியாக - நாம் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளோம். புதிய அரசமைப்பில் எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்தாத நிலையில் பழைய அரசமைப்பேநடைமுறையில் உள்ளது.

- இவ்வாறு குற்றம் சுமத்தினார் வடக்கு

பக்கம் 18 »

## மீதொட்டமுல்ல அனர்த்த அறிக்கை பொலிஸாரிடம்!

கொழும்பு, ஜூன் 08

பேராதனைப் பல்கலைக்கழக நிபுணர் குழுவினால் மீதொட்ட முல்ல குப்பைமேடு சரிந்து விழுந்தது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள நீதிவான் நீதி

பக்கம் 18 »

## சட்டவிரோத கடற்றொழிலைத் தடுக்கும் ஐ.நாவின் திட்டத்துக்கு ஒத்துழைப்பு

### சமுத்திரவியல் மாநாட்டில் ரணில் தெரிவிப்பு



நியூயோர்க், ஜூன் 08

சட்டவிரோத மற்றும் ஒழுங்குமுறையற்ற கடற்றொழில் நடவடிக்கைகளைத் தடுக்கும் ஐக்கிய நாடுகளின் திட்டத்துக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 »

## பௌத்த தூபியை டில்லியில் அமைக்க இலங்கை ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 08

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பௌத்த தூபி (Dagoba) ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று

பக்கம் 18 »

## தேர்தலை அநீதியான முறையில் ஒத்திவைத்துள்ளது இந்த அரசு

### கூட்டு எதிர்க்கட்சியினர் சீற்றம்

கொழும்பு, ஜூன் 08

அரசாங்கம் மிகவும் அநீதியான முறையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் ஒத்திவைத்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூட்டு எதிர்க்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 18 »

அளப்ப அருணாசலம்



எப்ப என்டாலும் சில விஷயங்கள் அம்பலத்துக்கு வரத்தானே செய்யும்...!

## தமிழருக்கான நிரந்தரத் தீர்வுக்கு அமெரிக்கா அழுத்தம் தர வேண்டும்

### ட்ரம்பை ரணில் சந்திக்கும் நிலையில் கோரிக்கை

வொஷிங்டன், ஜூன் 08

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய - நல்ல தொரு அரசியல் தீர்வை வழங்குவதற்கு, இலங்கை அரசாங்கம் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்காவில் செயற்படும் 'ட்ரம்பிற்கான தமிழர்கள்', புலம்பெயர் அமைப்பு

பக்கம் 18 »

## பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 08

வலிகாமம் கல்வி வலயத்தின் பௌர்ணமிதினக் கலை விழா இன்று வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் அருணாச்சலம் மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் 12 மணி வரை இடம் பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் கலை பீடாதிபதி பேராசிரியர் சி.மௌனகுருவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரும் கலந்து கொள்வர். (ச)

## மாணவர்களுக்கு சமய தீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 08

பாடசாலை மாணவர்களுக்குசமய தீட்சைவழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 11, 13, 15 வயதுடைய மாணவர்களைப் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ)

## ஒக்ரோபர் புரட்சி ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 08

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்கின் ஆறாவது அமர்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல 62.கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (ச)

# தேர்தலுக்குத் தயாராகுங்கள்!

## அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி; கட்சிகளை உஷார்படுத்துகிறார் பைஸர்



கொழும்பு, ஜூன் 08

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகிவிட்டன. இதன்படி வெகு விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகுமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்றங்களுக்கான திருத்தச் சட்டமூல வரைவு நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டது. வரைவு கையளிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு என் மீதே குற்றஞ் சாட்டப்பட்டது. உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணயச்செயற்பாடுகளில் முரண்பாடுகள் காணப்பட்டமையால் அதில் திருத்தம் செய்வதற்கு எமக்கு காலம் தேவைப்பட்டது.

இந்த நிலையில் தற்போது திருத்தம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலை நாம் வெளியிட்டு விட்டோம். தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசுக்கு எந்தவொரு நோக்கமும் கிடையாது. தேர்தல் முறைமை தொடர்பில் ஒரு சில பிரச்சினைகள் மாத்திரம் காணப்பட்டன. இது பேசு பொருளாக இருந்தது.

எனினும் புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாகவுள்ளார். ஏனெனில் புதிய தேர்தல் முறைமைக்கு மக்களின் ஆணை கிடைக்கப் பெற்றுள்ளது. - என்றார். (எ)

## சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகள்; பாடசாலைகளில் விழிப்புணர்வுக்கு ஏற்பாடு

### அதிகார சபை தீர்மானம்




சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒவ்வொரு பாடசாலைகளிலும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

கல்வி நிலையங்களில் அல்லது வெளியிடங்களில் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் துன்புறுத்தல் மற்றும் தகாத செயற்பாடுகள் தொடர்பில் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தை தேசிய பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர் என்று அந்த சபையின் தலைவி மர்சி டீ லிவேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'சிறுவர்கள் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் துர்நடத்தைகள் பற்றிய தகவல்களைக் கொடுப்பதற்காக அதிகார சபையின் 1929 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறு கிடைக்கும் தகவல்கள் தொடர்பில் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும்'- என்றார். (எ)

## வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு!

வனவிலங்குப் பாதுகாப்பு வலயங்களினுள் வாகனங்களின் வேகத்தை 50 கிலோ மீற்றர் வரை குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான பகுதிகளில், பஸ்களில் மோதி, காட்டு யானைகள் அதிகளவில் உயிரிழக்கின்றமை தொடர்பில், குருநாகல் மாவட்ட செயலகத்தில், அண்மையில் நடைபெற்ற பேச்சின்போது, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சில், ஆனையிறவை உள்ளடக்கி, பொலிஸ் சோதனைச் சாவடிகளை அமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (எ)

## கலைஞருக்கான உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 08

கலைஞர்களுக்கான உதவித்தொகையை 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திலிருந்தே இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (எ)

## இந்தியாவை மிஞ்சிய சமஷ்டியையே புதிய அரசமைப்பு பெற்றுக் கொடுக்கும்!

### குற்றம் சுமத்துகிறது தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம்



கொழும்பு, ஜூன் 08

பிரிவினைவாதிகளின் உள்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளையே தற்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னெடுத்து வருகின்றனர். புதிய அரசமைப்பு இந்தியாவை மிஞ்சிய சமஷ்டி ஆட்சி முறையை இலங்கையில் உருவாக்கும் என்று தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஒன்றியத்தின் தலைவர் குணதாசஅமரசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்தர்களுக்குநல்லிணக்கத்தைக் கற்றுத்தர வேண்டியதில்லை. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமே நல்லிணக்கம் என்ன என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இனவாதம் பேசுபவர்களை கைது செய்வதாயின் முதலில் விக்னேஸ்வரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரையே கைது செய்யுங்கள். - என்றார். (எ)

## வடமாகாண ஊடக பயிற்சி வேலைத்திட்டம்





தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்த ஊடக பயிற்சி வேலைத் திட்டம் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் பொது மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உத்தியோகத்தரும் அறிவிப்பாளருமான சிவராசா தலைமையில் மங்கல விளக்கேற்றல் மற்றும் அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்த ஊடக பயிற்சி நெறி இன்றும் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கிளிநொச்சி முல்லைதீவு யாழ்ப்பாண மாவட்டங்களை சார்ந்த சுமார் 50 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டுள்ளனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் சரத்சந்திரபாலாவும் நிகழ்வில் கலந்து கொண்டார். (இ-81)

# விசாரணைக் குழு வெளியிட்ட அறிக்கை நியாயமானது அல்ல, விவாதிக்க வேண்டும்

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 08

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையில், விசாரணையின்போது குறிப்பிடப்படாத பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், தாம் குறிப்பிட்ட சில விடயங்கள் சேர்த்துக்கொள்ளப்படாமல் உள்ளதென்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அறிக்கை நேற்று முதலமைச்சரால் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் விரும்பும் பட்சத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தன்னிலை விளக்கமொன்றை அளிக்க முடியுமென அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கூறினார். அப்போது விளக்கமளிக்கையிலேயே அமைச்சர் ஐங்கரநேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறிப்பாக மாகாண சபை தொடர்பாக நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கொன்றில் மாகாண சபைக்கு எதிராக வாதாடும் ஒருவர், அதே வழக்கிற்கு இதே விசாரணைக் குழுவின் முன்னால் நீதிவானாக நின்று அளித்துள்ள தீர்ப்பு நியாயமானதாக இருக்க முடியாது.

அத்தோடு, விசாரணையின் போது மத்திய அரசினதும் மாகாண சபையினதும் கணக்காய்வு அறிக்கை முற்றுமுழுதாகப் புறந்தள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் விவாதிக்கப்படுவது அவசியம். – என்றார். (ம)

# யாழ்.குடாநாட்டில் பல இடங்களில் நேற்று மாலை காற்றுடன் மழை

## கொடிகாமத்தில் மின் கம்பி அறுந்து ஒருவர் பலி

கடும் வறட்சிக்குப் பின்னர் நேற்று மாலை யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில இடங்களில் இடி, மின்னலுடன் கடும் மழை பெய்தது. திடீரென வானத்தில் கரு முகில்கள் தோன்றி சில மணி நேரம் மழை கொட்டித் தீர்த்தது. மழையின்போது கடும் காற்றும் வீசியது.

கடும் காற்றுடன் கூடிய இந்த மழையால் குடாநாட்டில் வெப்பம் தணிந்த போதிலும், பாதிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. கொடிகாமம் பகுதியில் மின் கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றிரவு 8.25 மணியளவில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வரணி இயற்றாலைப் பகுதியை சேர்ந்த சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரான சின்னத்தம்பி சிவகுரு (வயது 72) என்பவரே உயிரிழந்தார்.

மேலும், சில இடங்களில் பனை மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பயன்தரு மரங்களும் முறிந்தன. இதனால் சில இடங்களில் நேற்றிரவு மின்சாரம் தடைப்பட்டிருந்தது. (ம)

# காரைநகர் ஒளிச்சுடர் வி.கழக கட்டடம் நேற்றுத் திறந்துவைப்பு


காரைநகர், ஜூன் 08

காரைநகர் சிவகாமியம்மன் கோவிலடியிலுள்ள ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகத்தின் புதிய கட்டம்திறந்துவைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். பத்மேந்திரா தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், காரைநகர் பிரதேச செயலாளர் என். தயாரூபன், அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ராஜச்சந்திரன், காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆசிரியர் ப.தர்சானந், காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, புதிய கட்டடம் மற்றும் முகப்பு வளைவு என்பன திறந்து வைக்கப்பட்டன. இந்த விழாவில் விளையாட்டு வீரர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)



# இலங்கையில் 2020 ஆம் ஆண்டு புகையிலைச் செய்கைக்குத் தடை

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு முதல் புகையிலைச் செய்கை தடை செய்யப்படும் என சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கையில் முழுமையாக புகையிலைப் பயிர்ச் செய்கை தடுக்கப்படும். புகையிலை உற்பத்திகளால் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை தடுக்கும் நோக்கில் இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட உள்ளது. – என அவர் தெரிவித்தார். (ம)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்று மாகாண சபையில் நடைபெற்றது. அதன்போது அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழுவின் அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலமைச்சர் அங்கு ஆற்றிய உரையின் முழு வடிவம் வருமாறு –

பலவிதமான குற்றச்சாட்டுக்கள் எமது அமைச்சர்களுக்கு எதிராகக் கிடைத்ததன் விளைவாக நாம் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தோம். அதில் இருவர் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள். ஒருவர் இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவையின் ஒரு சிரேஷ்ட அதிகாரியாவார். விதிமுறைக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் மூடிய அறையில் விசாரணைகள் நடைபெற்றன.

ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கப்படாது என்ற நிபந்தனையின் பேரில் விசாரணைகள் நடைபெற்றன. தற்போது அவர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

### நான்கு அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்களும் –

சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சருக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களும் –

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர், விவகார அமைச்சருக்கு எதிராக 9 குற்றச்சாட்டுக்களும் –

விவசாய கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சருக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்களும் கிடைக்கப்பெற்றன.

நான்கு அமைச்சர்களும் குழுவின் அதிகாரத்தை ஏற்று சாட்சியமளித்துள்ளார்கள். சாட்சியமளிக்க அவர்கள் பின்நிற்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான அறிக்கையை இச் சபை முன் சமர்ப்பிக்க முன், சில விடயங்களைப் பகிர்ந்து கொள்வது நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன்.

விசாரணைக்குழு அங்கத்தவர்கள் வடமாகாணசபையின் நடவடிக்கைகள் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் கருத்துப்படி எமக்கிருக்கும் மிகக் குறுகிய அதிகாரங்கள் பற்றியும் ஆளுநரின் அதிகாரங்கள் பற்றியும் பல்வேறு கருத்துக்களைத் தம் அறிக்கையில் முன் வைத்துள்ளார்கள். அவை எம்மால் பரிசீலிக்கப்பட வேண்டியவை.

முறைப்பாட்டாளர்கள் வராததால் சில அமைச்சர்கள் பேரிலான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாகச் சாட்சியம் கிடைக்க வில்லை என்று கூறியுள்ளார் கள். மற்றையவர்கள் சம்பந்த மான தவறுகள் பல எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றிக் கூறியுள்ளார்கள். பணவிரயம் பற்றிக் கூறியுள்ளார்கள். அதிகார வரம்பை மீறியுள்ளதாகக் கூறியுள்ளார்கள். மேலும் பல தவறுகள் பற்றிக் கூறியுள்ளார்கள்.

பொதுவாகக் குற்றச்சாட்டுக்கள் எமது உறுப்பினர்களாலேயே முன் வைக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் நால்வரான அமைச்சர்கள் மீது மற்றைய சில உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி அவை சம்பந்தமாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### என்ன நடவடிக்கை?

விதப்புரைகளையும் விசாரணைக் குழுவினர் தந்துள்ளார்கள். அறிக்கையின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி நானே தீர்மானிக்க வேண்டும். எனினும் நான் தீர்மானிக்க முன், சபையினரின் கருத்தை அறிய ஆவலாய் இருக்கின்றேன்.

அத்துடன் அறிக்கையில் இருப்பவை பற்றி சம்பந்தப்பட்டவர்கள் சபையில் விளக்கமளிக்க அவகாசம் அளிக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகின்றேன். ஏனென்றால் சில விடயங்கள் விசாரணைக் குழுவினால் கவனத்திற்கு எடுக்கப்படவில்லையென்றோ தவறான முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள் என்றோ பாதிக்கப்பட்டவர்களால் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாங்கள் ஈடுபட்டுள்ள இந்தச் செயல்முறை பொது வாழ்வில் உள்ளவர்கள் வெளிப்படைத் தன்மைக்கும் பொறுப்புக் கூறலுக்கும் தம்மை முன்னிறுத்த முன்வர வேண்டும் என்ற கருத்தை முன்னிலைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### மக்களின் எதிர்பார்ப்பு

மக்கள் எம்மைத் தேர்ந்தெடுக்கும் போது எங்கள் மீது அவர்களுக்குப் பல எதிர்பார்ப்புக்கள் இருந்தன. நேர்மையான, ஊழலற்ற, பக்கசார்பற்ற, கண்ணியமான ஒரு நிர்வாகத்தை நாம் அவர்களுக்குக் கொடுப்போம் என்ற எதிர்பார்ப்பே அது.

புதிய ஒரு அமைப்பான வடக்கு மாகாணசபையைக் கையேற்றபோது நாம் ஒரு நம்பிக்கைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். ஆகவே நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற முறையில் நேர்மை, பக்கசார்பற்ற தன்மை, பொறுப்புக் கூறல், பொறுப்பாக நடந்து கொள்ளல் மற்றும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது போன்ற குணாதிசயங்களை மக்கள் எங்களிடம் எதிர்பார்த் துள்ளார்கள்.

அந்த நம்பிக்கையை நாங்கள் மழுங்கடிக்கும் வண்ணம் நடந்து கொள்ளக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தவே மேற்படி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. எம்மிடம் குறைபாடுகள் இருப்பின், அவற்றை நிவர்த்தி செய்யவே இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. எம்மை நாமே ஒழுக்கப்படுத்த அல்லது எமது நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய இந்த வழிமுறை உதவியது.

மத்திய அரசாங்கமும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் தமது நிர்வாகத்தில் உள்ளடக்குவதாகவே கூறிப் பதவிக்கு வந்தது. அந்த வகையில், எங்கள் வடமாகாணம் வேறெந்த குறைகள் இருப்பினும் அடிப்படை விடயங்களில் சறுக்கிவிடக் கூடாது. அதிகாரத் துஷ்பிரயோகம், பணவிரயம், அதிகார வரம்புமீறல், பக்கச்சார்பான நடவடிக்கைகள் போன்றவை எமது நிர்வாகத்தைக் கேள்விக் குறியாக்கி விடுவன.

### அறிக்கையில் சில குறைபாடுகள்

நாம் எமது குறைபாடுகளை சீர்செய்ய வேண்டும். ஆனால் அதே நேரம் விசாரணைக்குழுவின் அறிக்கையில் முன்கூறியவாறு பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு நான் வருகைதராத ஒரு கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான பல விடயங்கள் சம்பந்தமாக எமது அமைச்சர்கள் கேள்விகளை எழுப்பவோ விளக்கமளிக்கவோ நாம் இடமளிக்க வேண்டும். எந்த விடயத்திலும் மேன் முறையீடு செய்ய வசதி அளிக்கப்படும். அதை யொட்டியே இந்தக் கோரிக்கையை விடுக்கின்றேன்.

அத்துடன் முறைப்பாட்டாளர்கள் வருகை தராததால் கைவிடப்பட்ட விசாரணைகளை மீண்டும் உயிர் கொடுக்க வேண்டுமென்றால் அதனைச் செய்யவும் நாங்கள் தவறக்கூடாது. சபையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. எந்த ஒரு விவாதமும் தனிப்பட்ட ரீதியாக எவரையும் தாக்குவதாக அமையக்கூடாது. ஒரு விடயம் நடந்ததா இல்லையா என்பதை அறிவதே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்குவதையும் அவர்கள் மனத்தைப் புண்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இனியாவது தனிப்பட்ட முறையில் உறுப்பினர்களைத் தாக்குவதைத் தவிர்ப்போமாக!

### சபைக்கே இழுக்கு

உங்கள் அனைவரிலும் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் அறிக்கையின் பிரதியைச் சபைக்குக் கையளிக்கின்றேன். இந்த அறிக்கை அந்தரங்கமானது. ஊரைக்கூட்டி உங்கள் உரைகளை ஊறிய ஊடகங்களுக்குக் கையளிப்பது எமது வடக்கு மாகாண சபைக்கே இழுக்கை ஏற்படுத்தும்.

குற்றமற்றவர்களே மேரி மக்டெலின் மீது முதற்கல் எறிய முன்வாருங்கள் என்றார் இயேசு கிறிஸ்துநாதர். குற்றஞ்சாட்டுவதால் அரசியல் இலாபம் பெற விழைவோர் தமது நடவடிக்கைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த முன்வர வேண்டும். நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் எம் ஒவ்வொருவரையும் உள்ளடக்கியது என்பதை மறவாது இருப்போமாக.

இது சம்பந்தமான விவாதத்தை இம்மாதம் 9 ஆம் திகதி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறான விடயங்களை நீடிப்பதால் அலுவலகங்களில் வேலைகள் தடைப்பட்டுப் போய் விடுவன. ஆகவேதான் 9 ஆம் திகதி விவாதத்திற்கு நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட அமைச்சர்கள் அறிக்கை பற்றிய தமது விளக்கங்களை உடனேயே எழுத்து மூலம் தரவேண்டும். சபையினர் அனைவருக்கும் அறிக்கையும் அந்த விளக்கங்களும் தாமதமில்லாது கையளிக்கப்பட வேண்டும். – என்றார். (ம)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## அமைதித் தீர்வுக்கு அவசியமானது

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட விவாதத்தின் மீது பேசுகையில், எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் குறிப்பிட்ட சில கருத்துகள் முக்கியமானவை.

இந்த நாட்டில் சிறுபான்மையினரை - குறிப்பாக தமிழ் பேசும் மக்களை தமது சகோதரர்களாக - சமபிரஜைகளாக - தங்களுக்குரிய அதே கௌரவத்துடனும் உரிமைகளுடனும் வாழக் கூடியவர்களாக - அரவணைத்துக் கொள்வதற்கு இந்தத் தீவின் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் தயாரா என்பதுதான் இன்றைய சூழலில் முக்கியமானது.

எந்த அமைதி முயற்சிகளும் - சமாதான எத்தனங்களும் இந்தக் கேள்விக்கான பதிலிலிருந்துதான் கட்டியெழுப்பப்பட முடியும்.

இந்தத் தீவின் சிறுபான்மை மக்களை மூன்றாந் தரப் பிரஜைகளாகவே தொடர்ந்தும் கருதுவோம் என்று ஒற்றைக் காலில் - அடம்பிடித்து - நிற்கும் தென்னிலங்கையுடன் சமரசம் பேசி, சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, நிரந்தர அமைதித் தீர்வு ஒன்றை எட்டுவது சாத்தியமற்றது.

எனவே, எந்த அமைதி முயற்சியையும் ஆரம்பிப்பதற்கும் முன்னரான நிபந்தனையாக, சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை இந்தத் தீவில் சம பிரஜைகளாக ஏற்று, அங்கீகரித்து அதனடிப்படையில் முயற்சிகளை முன்னெடுக்கத் தயாரா என்ற கேள்வி தென்னிலங்கையிடம் முன்வைக்கப்படுவது கட்டாயமானது. நீதி, நியாயமான - நின்று நிலைத்து, நீடிக்கக் கூடிய - ஒரு தீர்வை எட்டுவதற்கு இந்த விடயம் அத்தியாவசியமானது.

இந்தக் கேள்விக்கான சிங்களத்தின் இணக்கம் - அல்லது சாதகமான பதில் - வெறும் வாய்ப்பேச்சு அறிக்கையாக, அறிவிப்பாக மட்டும் இருக்கக் கூடாது. அதையும் தாண்டி சொல்லிலும், செயலிலும், வெளிப்படுத்தப்பட வேண்டும். பெரும்பான்மைச் சிங்களத்தின் ஆழ்நிலை எண்ணவோட்டத்திலிருந்து அந்த அரவணைப்புப் பண்பியல்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்; பிரதிபலிக்க வேண்டும்.

அந்த அடிப்படை மாற்றம் தென்னிலங்கைத் தரப்பில் இல்லை என்பதைத்தான் சம்பந்தன் ஐயாவினதும் சுமந்திரனினதும் நாடாளுமன்ற உரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

1970 களிலும் 1980 களிலும் ஜே.வி.பியினரின் 'பயங்கரவாதம்' கட்டவிழ்ந்த சமயங்களில் அவற்றை அடக்குவதற்காக அரச ஆயுத பலம் அவர்கள் மீது ஏவிவிடப்பட்டது. அது 'அரச பயங்கரவாதமாக' உருவெடுத்து அப்பாவிப் பொதுமக்களையும் - தென்னிலங்கைச் சிங்களவர்களையும் - கொன்றொழித்து அட்டகாசம் புரிந்தது. அதற்கு எதிராகத்தான் அன்று மஹிந்த ராஜபக்ஷ - எதிர்க்கட்சிப் பிரமுகராக - மனித உரிமை ஆர்வலராக - ஜெனீவாவுக்குப் போனார். அன்றைய ஆட்சியாளரான ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராகப் பொங்கி எழுந்தார்.

தென்னிலங்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கு எதிராக 'அரச பயங்கரவாதம்' பாய்ந்தால், அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவதை நியாயமாகக் கொண்ட மஹிந்தவுக்கும் அவரது அணியினருக்கும் தமிழர்களுக்கு - அப்பாவித் தமிழ் பொதுமக்களுக்கு - எதிராக 'அரச பயங்கரவாதம்' புரிந்த கொடூரங்களுக்கு எதிராக அதே ஜெனீவா, விசாரணை நடத்துமாறு கோரினால் அது இறைமை மீதான தலையீடாகத் தோன்றுகின்றது.

அத்தகைய விசாரணைகளை ஜெனீவாத் தீர்மானத்துக்கு அமைய விசாரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டைத்தான் புதிய நல்லாட்சி அரசும் எடுக்கின்றது.

அதாவது, தமிழர்களுக்கு எதிராகப் புரியப்பட்ட கொடூரங்கள் என்பதால் அவற்றை விசாரிக்க முடியாது. அதுதான் தென்னிலங்கையின் குருட்டு நிலைப்பாடு.

அத்தகைய சிங்களம், தமிழர்களை சமபிரஜைகளாக ஏற்குமா? அவர்களிடம் இருந்து நீதி, நியாயமான தீர்வு கிட்டும் என்று நம்பலாமா? அப்படிக் கிட்டினாலும், அதை நடைமுறைப் படுத்துவதற்கு முதலில் சிறுபான்மையினரை சம - சகோதர - பிரஜையாகப் பெரும்பான்மையினர் கருதாமல் இருக்கும்போது, அத்தீர்வு எப்படி சாத்தியமாக முடியும்? - இவையே சம்பந்தரின் நாடாளுமன்ற உரைக்குப் பின்னால் இருந்து எழும் கேள்விகள்.

யுத்த காலத்தில் தென்னிலங்கைச் சிங்கள ஊடகவியலாளருக்கு எதிரான கொடூரங்கள், குற்றங்கள் குறித்து தீவிரமாகவும், ஆழமாகவும், ஊடுருவி, விசாரித்து, துப்புத் துலக்கி, புலனாய்வுகளை வேகமாக முன்னெடுத்துவரும் நல்லாட்சி அரசு, அதே காலப்பகுதியில் அதிகளவான கொடூரங்களையும், உயிரிழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்த தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் ஒரு துரும்பைத் தன்னும் அசைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் சுமந்திரன்.

ஊடகவியலாளருக்கு எதிரான 'அரச பயங்கரவாதம்' தொடர்பிலேயே தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடு பார்க்கும் ஆட்சி முறைமையின் கீழ் நீதி, நியாயமான தீர்வு கிட்டும் என எதிர்பார்ப்பது பயனற்றது.

முதலில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை சகோதரர்களாக, சமவுரிமை கொண்டவர்களாக மதிக்கும் மாண்பு தென்னிலங்கைக்கு வர வேண்டும். அப்போதுதான் நியாயமான தீர்வு சாத்தியமாகும்.

# சர்வதேச சமூகத்துக்கு நாடு அடி பணியவில்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

சர்வதேச சமூகத்துக்கோ அல்லது வேறு எந்த வெளிநாட்டு சக்திகளுக்கோ நாடு அடிபணியவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிவது என்பதும் சர்வதேச நாடுகளுக்கான கதவுகளைத் திறப்பது என்பதும் வித்தியாசமான விடயங்களாகும். கடந்த அரசின் செயற்பாடுகள் காரணமாக நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. எனினும், தற்போதைய அரசு மீண்டும் நாட்டில் இறைமையை ஏற்படுத்தியுள்ளது.- என்றார்.

இதேவேளை, நாட்டுக்குப் பாதகம் இல்லாத வகையில் செயற்படவேண்டியது அரசின் பொறுப்பாகும் என்று எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் இதன் போது குறிப்பிட்டார்.



இந்தநிலையில் கடந்த அரசின் வெளிநாட்டுக் கொள்கை நாட்டுக்குப் பாதகமாக அமைந்திருந்த தென அமைச்சர் மஹிந்த சமரசிங்க சுட்டிக்காட்டினார். அனைத்து நாடுகளுடனும் ஒரேவிதமாக நடந்து கொண்டால் சிக்கல் ஏற்படப்போவதில்லை. அதனை புரிந்து கொண்டு ஜனாதிபதி அனைத்து நாடுகளுடனும் கூட்டிணைந்து செயற்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# இனக்கலவரங்களை ஏற்படுத்த முயல்கின்றது நல்லாட்சி அரசு!



## குற்றம் சுமத்துகிறார் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 08

முஸ்லிம்-சிங்கள இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து இனக்கலவரங்களை ஏற்படுத்துவதற்கு தற்போதைய நல்லாட்சி அரசு முயற்சி செய்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களை தற்போதைய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதுடன், அதற்குக் காரணமானவர்களைக் கைதுசெய்யவும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

அரசு மறைமுகமாக தமது சில நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இவ்வாறான சம்பவங்களை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக முஸ்லிம் இனத்தவரின் மதவழிபாட்டுத் தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் திட்டமிட்டே நடத்தப்படுகின்றன. -என்றார். (எ)

# பொதுபலசேனாவை வளர்த்தவர்களே அலங்கரிக்கின்றனர் அமைச்சுகளை!

## சாடுகிறார் முன்னாள் அமைச்சர் அஸ்வர்

பொதுபலசேனாவை வளர்த்தவர்கள் இன்று அமைச்சுக்களை அலங்கரிக்கின்றனர் என்று முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் இடம்பெறுகின்ற சிறுபான்மையினருக்கு எதிரான நிலையைச் சுட்டிக்காட்டி நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்தவின் ஆட்சிக்காலத்திலும் கூட பொதுபலசேனாவை அந்த ஆட்சி உருவகப்படுத்தவில்லை. அது பௌத்தர்களுக் காக வேண்டி தானாகவே ஏற்படுத்தியதொரு இயக்கம். அவர்கள் செய்த அட்டகாசங்களுக்கு அன்றிருந்த அரசை நாலா புறமும் சாடினார்கள். ஆனால், முஸ்லிம்களுக்கு இழைத்த துன்புறுத்தல் களுக் குப் பின்னணியில் இருந்து சர்வதேச கரங்கள் சூழ்ச்சி செய்திருக்கின்றன என்பது இப்பொழுது புலனாகின்றது.

பொதுபலசேனாவுடைய அட்டகாசங்களை இன்று எதிர்க்கட்சியிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவும் ஏனையவர்களும் கடுமையாகச் சாடி வருகின்றனர். அவர்கள் ஏற்படுத்தியதொரு இயக்கம் என்றால் அப்படி அவர்களால் சாட முடியாது.

பொதுபலசேனாவுக்கு இன்று யார் பெருமை கொண்டாடுகின்றார்கள் என்று சொல்வதைவிட, இன்று அவர்கள் புரிகின்ற அட்டகாசத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அவர்களை உடன்கைது செய்வதற்கு முஸ்லிம் அமைச்சர்களும் ஏனையோரும் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தான் அனைத்து முஸ்லிம்களுடைய ஏகோபித்த வேண்டுகோளாகும்.- என்றார்.


சுற்றாடல் சுத்தம் பேணுவோம்! விலங்கு விசர் நோய் ஒழிப்போம்!!

- காயத்தினை மூடிக் கட்டாது காற்று பிடிக்க விடுதல் வேண்டும்.
- கடி காயத்தினை ஓடும் நீரினால் கழுவி சுத்தப்படுத்துதல் வேண்டும்.
- கடி காயத்தினை வெறும் கையினால் தொடுதல் கூடாது.
- கடி காயத்திற்கு கை வைத்தியம் செய்வதை இயலுமானவரை தவிர்த்தல் நன்று.



சந்தேகத்துக்கு இடமான நாய்கள் தொடர்பில் அவதானமாக இருப்போம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


## நாளை

09.06.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : கேட்டை பி.இ. 5.39 வரை
திதி : பூரணை மு.இ. 7.04 வரை

சுபநேரம் : 5.52 – 7.22 வரை
இராகுகாலம் : 10.22 – 11.52 வரை

# முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் தூக்க வைத்து இன்னுமோர் இரத்த ஆறு ஓட வழி செய்யாதீர்கள்!

கொழும்பு, ஜூன் 08

முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் தூக்க வைத்து இன்னுமோர் இரத்த ஆறு ஓடுவதற்கு வழி செய்யாதீர்கள் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்று முன்தினம் ஜெனீவா மனித உரிமைப் பிரேரணை தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அல்லாஹ்வையும், முஸ்லிம்களின் இறைதூதரையும், முஸ்லிம்களின் வாழ்க்கை முறையையும் தொடர்ந்தும் கேவலப்படுத்தி பழி சொல்லி வரும் மதகுரு ஒருவரினதும், அவரைச் சூழ்ந்திருக்கும் திருடர்களினதும் கேவலங்கெட்ட செயலைத் தொடர்ந்து அனுமதித்து வருகின்றீர்கள்.

அந்த மதகுருவுக்கெதிராக எத்தனையோ முறைப்பாடுகள் இருந்தும் அவரைக் கைது செய்வதற்கு பின்னடிக்கின்றீர்கள். அவரைக் கைது செய்வதற் கென நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் இன்னும் பூச்சாண்டி காட்டி வருகின்றனர். இது வெட்கத்துக்குரிய செயல்.

எவரையும் கைது செய்ய வேண்டுமென்பதோ, எவரையும் சிறையிலடைத்து துன்புறுத்த வேண்டுமென்பதோ முஸ்லிம் சமூகத்தின் நோக்கமாக இல்லாத போதும், அந்த மதகுரு முஸ்லிம்களை நிம்மதியாக வாழ விடாததனாலேயே அவரைக் கைது செய்ய வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

எங்களைத் தொடர்ந்தும் அவர் துன்புறுத்தியே வருகின்றார். அதனால், தான் நானும் பொலிஸ் தலைமையகத்தில் அவருக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்திருக்கிறேன்.

**கைது நாடகம்**

ஆனால், இன்னும் கைது செய்யும் நாடகம் தான் தொடர்கின்றதே தவிர அவரைக் கைது செய்ய மறுக்கிறார்கள். அவர் ஒளிந்திருக்கின்றார் என பம்மாத்துக் காட்டுகிறார்கள்.



*அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றில்*

பொலிஸ் மா அதிபருக்கே சவால் விட்டுக் கொண்டு சட்டத்தையும் கையிலெடுத்து அவர் தான் நினைத்தபடி ஆடி வருகின்றார்.

**வெட்கம் வெட்கம்**

திறமையான புலனாய்வுப் பிரிவு நமது நாட்டில் இருக்கிறது என கூறப்படுகின்றது. ஆனால், இந்த மத குரு இருக்கும் இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது தான் வெட்கமாக இருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான துன்பங்கள் இன்னுமே தொடர்ந்த வண்ணமுள்ளன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிறுவனத்தை எரித்தும், அழித்தும் வருகின்றார்கள். சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன.

ஆனால், இவற்றை முறையிடும் போது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறப்படுகின்றதே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக இல்லை. இது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது.

எங்களுக்கு எதிராக செயற்பட்டு, எமது நிம்மதியை குலைப்பவர்களுக்கெதிராக ஜனாதிபதியும் பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் இந்த உயர் சபையில் வலியுறுத்த விரும்புகின்றோம். இந்தச் சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்த ஏற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் விளைவுகள் விபரீதமாகும்.

முஸ்லிம்களின் பொறுமையை இனியும் சோதிக்காதீர்கள், . நாங்கள் இவ்வளவு நாளும் பொறுத்தது போதாதா? எங்களைத் தொடர்ந்தும் சீண்டிக்கொண்டு இருப்பவர்களுக்கெதிராக உடன் நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகிறீர்கள் .- என்றும் தெரிவித்துள்ளார். (எ)

# மாணிக்க கங்கையில் முதலைகளால் ஆபத்து!

கொழும்பு, ஜூன் 08

கதிர்காமம் மாணிக்க கங்கையில் முதலைகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

மாணிக்க கங்கையில் உள்ள முதலைகளை பிடிக்கும் நடவடிக்கைகளை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இடைநிறுத்தியுள்ளனர்.

இதனால், பெரிய முதலைகள் கங்கையில் உலாவுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாகவீதி பாலத்திற்கு அருகில் இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 பாலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் முதலைகள் சஞ்சரிக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முதலைகள் எந்தவொரு நேரத்திலும் உயிர்களை காவு கொள்ளக் கூடும் எனவும் பெரிய முதலைகளை வேறு இடத்திற்கு அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கதிர்காம மக்கள் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

எனினும், இந்தக் கோரிக்கைக்கு இதுவரையில் உரிய பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முதலைகளைப் பிடித்து வேறு இடங்களுக்கு மாற்றினால் பக்தர்கள் மாணிக்க கங்கையில் அச்சமின்றி நீராட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இம்முறை 30 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு

2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான கல்வியாண்டுக்காக சுமார் 30 ஆயிரம் மாணவ, மாணவியர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலான இசட் புள்ளிகள், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

இந்த இசட் புள்ளிகள் அடிப்படையில் இந்தக் கல்வியாண்டுக்காக 29 ஆயிரத்து 696 மாணவ, மாணவியர் இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட உள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2ஆயிரத்து93 மாணவ, மாணவியர் மேலதிகமாக பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதிக்காக 71 ஆயிரத்து106 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

# அம்பாந்தோட்டையை மீட்க ஜனாதிபதி மைத்திரி முயற்சி!

கொழும்பு, ஜூன் 08

மோசமான காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தால் சீர்குலைந்த அம்பாந்தோட்டை மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்பதற்கான திட்டம் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மாவட்டத்தில் அனர்த்தத்துக்குள்ளான வீடுகளை மீள நிர்மாணித்தல், அழிவுற்ற வீதிகள், பாடசாலைகள், நீர்ப்பாசன கட்டமைப்புகள் போன்றவற்றை புனரமைத்தல், பயிர் நிலங்களை இயல்பு நிலைக்கு கொண்டுவருதல் போன்றவற்றுக்காக முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் அலுவலர்களிடம் வினவிய ஜனாதிபதி, அந்தச் செயற்பாடுகளை



துரிதப்படுத்தி, முறையாக முன்னெடுக்க வேண்டும் என்றும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதிக்கப்பட்ட வீதிகள், பாலங்களை திருத்துவதற்கான செலவு மதிப்பீடுகளை விரைவாக வழங்குங்கள் என்றும் அதற்கான முதற்கட்ட நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட பயிர்ச்செய்கைகளுக்கான உரம் மற்றும் விதை நெல்லை வழங்குவதற்கு விவசாய அமைச்சின்மூலம்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீர்ப்பாசன கட்டமைப்புகளை திருத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கவும், மண்சரிவு அபாயம் நிலவும் பாதுகாப்பற்ற இடங்களில் குடியிருக்கும் மக்களை அந்த இடங்களிலிருந்து அகற்றி, பாதுகாப்பான வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

சட்டவிரோத நிர்மாணங்களை அகற்றுவதற்காக பிரதேச அரசியல்வாதிகளின் ஒப்புதலுடன் முறையான திட்டத்தின்மூலம்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோட்டையாக கருதப்படும் அவரின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி தலைமையிலான கூட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதான ரயில் போக்குவரத்து ஸ்தம்பிதம்!

கொழும்பு, ஜூன் 08

பிரதான ரயில் போக்குவரத்துகள் நேற்றுக் காலை ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதனால், பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கம்பஹா, கனேமுல்லை ரயில் நிலையத்தில் ரயில் ஒன்றில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், வழமையான ரயில் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் இன முரண்பாட்டைத் தடுக்க முடியும்!

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 08

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் இன முரண்பாட்டைக் கட்டுப்படுத்தலாம்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் தெளிவானதொரு அரசியல் சீர்திருத்தம் இன்மையால் பல இனவாதச் செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன. மாகாணங்களுக்கிடையிலான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தால் எவருமே இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட நாம் அனுமதித்து இருக்க மாட்டோம்.

இதன்மூலம் எமது மாகாணங்களின் பாதுகாப்பை நாம் வரையறுத்து இனமுறுகல்களைத் தோற்றுவிக்கும் சக்திகளை முறியடித்திருக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# எமக்கு வேண்டாம் இந்த நல்லாட்சி உறுதிப்படுத்துவோம் அதை தேர்தலில்!

## அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் ஆவேசம்

அம்பாறை, ஜூன் 08

இந்த நல்லாட்சியும் எமக்கு வேண்டாம். இவர்களின் நல்லதும் வேண்டாம். இதனை எதிர்வரும் தேர்தலில் உறுதிப்படுத்துவோம்.

-இவ்வாறு அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் காரைதீவு விபுலானந்தா சதுக்கம் அருகே மேற்கொண்டு வரும் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை 101 ஆவது நாளை எட்டியது. இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து பட்டதாரிகளுக்கும் தகுதியான தொழிலை எந்தத் துறையிலாவது வழங்குமாறு கோரி, போராட்டத்தை ஆரம்பித்து 101 ஆவது நாளை எட்டிவிட்டோம். ஆனால், எமக்கான தீர்வு எட்டப்படாத நிலையிலேயே போராட்டம் தொடர்கிறது.

இந்த அரசு ஆட்சிப் பீடம் ஏறுகின்ற போது 10 லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று வழங்கிய வாக்குறுதி இப்போது பொய்யாகி உள்ளது. இது வரைக்கும் எந்த ஒரு நல்ல திட்டத்தையும் சரிவரச் செய்ய முடியாத கையாலாகாத நிலையில் உள்ள இந்த அரசு எம் மீது அக்கறை காட்டவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 10 லட்சம் வேலைவாய்ப்புக்கள் தருவோம் எனக் கூறியது.

எங்கே அந்த 10 லட்சம் வேலைவாய்ப்புகள். அனைத்தும் போலி. இந்தக் கட்சியால் எந்தநல்லதிட்டத்தையும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது. இருப்பினும், எத்தனைநாள்கள் சென்றாலும் நாம் எமது இறுதி இலக்கை அடையும் வரை பின்வாங்கப் போவதில்லை. - என்றனர். (ச)





# போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது!

கிண்ணியா, ஜூன் 08

திருகோணமலை கிண்ணியாவில் 126 போதை மாத்திரைகளுடன், இளைஞன் ஒருவரை நேற்றுப் புதன்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

கிண்ணியா, நியாத் நகரைச் சேர்ந்த 27 வயதுடைய மேற்படிச் சந்தேகநபர், போதை மாத்திரைகளைக் கிண்ணியாவில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லும் போதே கைது செய்யப்பட்டார்.

மேலும், அவரிடமிருந்து, 5 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாப் பொதி ஒன்றும் கைப்பற்றப்பட்டது எனத் திருகோணமலை போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. ஜோன்சன் தெரிவித்தார். (ச)

# உலக சமுத்திர தினத்தை முன்னிட்டு மட்டு. நகரில் விழிப்புணர்வுப் பேரணி!



மட்டக்களப்பு, ஜூன் 08

உலக சமுத்திரத் தினத்தை முன்னிட்டு மட்டுநகர் கல்லடி யில் நேற்றுப் புதன் கிழமை விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மற்றும் கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலம் கடற்கரைவரை சென்றது. இதனை அடுத்து, கல்லடி தொடக்கம் நாவலடிவரையான கடற்கரையோரத்தைச் சுத்தப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்.குணநாதன் கருத்துத் தெரிவிக்கையில்-

மனிதன் தனது வேலைப்பாடுகளை இலகுவாக மாற்றுவதற்கு புதியகண்டுபிடிப்புகளை ஏற்படுத்தினான். இதன் காரணமாக உற்பத்தி செய்யப்பட்ட பலபொருள்கள் சூழலுக்கு பெரும் பாதிப்புக்களைஏற்படுத்துகின்றன.

மலைப்பகுதிகளில் உள்ள தாவரங்கள் அழிக்கப்பட்டமை, பெருந்தெருக்களை உயரமாக மாற்றி வீதிகளை அமைத்தமை ஆகிய இரு காரணங்களே இந்த நாட்டில் இயற்கை அனர்த்தங்கள் அதிகளவு ஏற்படுவதற்குக் காரணமாகும்.

கடலில் போடப்படும் தீங்கான பொருள்கள் இறுதியில் அங்குள்ள மீன் இனங்களையே சென்றடைகின்றன.

அதனை நாங்கள் உண்ணும்போது செறிவடைந்த அந்த பொருள்கள் நேரடியாக எமது உடலுக்குள் செல்லும்



நாங்கள் சமுத்திரங்களில் இருந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றோம். நிலத்தடி நீர் மாசுபடுவதை விட சமுத்திரம் மாசுபடுத்தப்படுமானால் அதன் தாக்கம் அதிகமாக இருக்கும்.

நிலையேற்படும். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனும் எதிர்காலச் சந்ததிக்கு ஆரோக்கியமான சூழலை விட்டுச்செல்லும் வகையில் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.-என்றார். (ச)

# பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட, பிள்ளையான் உட்பட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம். ஐ.இஸ்ஸதீன் முன்னிலையில் நேற்றுப் புதன் கிழமை இவர்களை ஆஜர்படுத்தியபோதே, நீதிபதி இவர்களுக்கான விளக்கமறியலை நீடித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்புப் புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் தின நள்ளிரவு ஆராதனையின் போது சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம்; கதிரவெளி மாணவர்கள் பேரணி!

மூதூர் பகுதியில் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு கதிரவெளி விக்கினேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்கள், கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை நேற்று புதன்கிழமை காலை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் வாகரைப் பொலிஸ் அதிகாரிக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பெண்கள் மற்றும் சிறுமியர் மீது துஷ்பிர்யோகங்களை மேற்கொள்பவர்களுக்கு கடு




மையான தண்டனை வழங்கப்பட்டிருந்தால், புங்குடுதீவு வித்தியா, தென்னிலங்கையை சேர்ந்த சேயா என இப்பட்டியல் நீண்டு சென்றிருக்காது.

மூதூர் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் காப்பாற்றுவதற்காக கிழக்கு மாகாணத்தின் அரசியல் வாதிகளும், சட்டத்தரணிகளும் முன் நிற்பது அருவருக்கத்தக்க விடயமாகும். இந்த செயற்பாடு நல்லாட்சியையும், நீதித்துறையையும் கேள்விக் குறியாக்கி உள்ளது. - என்றுள்ளது. (ச)

# கட்டாரில் உள்ள இலங்கையர்களுக்கு எந்தவித உடனடிப் பாதிப்பும் ஏற்படாது!

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல்



கொழும்பு, ஜூன் 08

கட்டாருடனான அனைத்துத் தொடர்புகளையும் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாஹ்ரெய்ன், எகிப்து, யேமன் ஆகிய நாடுகள் துண்டித்துள்ளமையால், கட்டாரில் உள்ள இலங்கையர்களுக்கு எந்த உடனடிப் பாதிப்பும் ஏற்படாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், நிலைமைகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

கட்டாரில் உள்ள இலங்கையர்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால், அங்குள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

கட்டாரில் உள்ள, அந்த நாட்டுடன் உறவுகளை முறித்துக் கொண்ட நாடுகளின் நிறுவனங்களில் பணியாற்றுவோர், நெருக்கடிகளை எதிர் கொள்ளலாம் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே தெரிவித்திருந்தார்.

அதேவேளை, கட்டாரில் உள்ள இலங்கையர்கள் நேரடியாக எந்தப் பாதிப்பையும் எதிர் கொள்ளமாட்டார்கள் என்று இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவும் தெரிவித்துள்ளார்.

இது ஒரு பிராந்திய விவகாரம். இதனால், இலங்கைக்கு அச்சுறுத்தல் இல்லை. இராஜதந்திர ரீதியாக இலங்கைக்கு கட்டாருடன் எந்தப் பிரச்சினையும் இல்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள வங்கிக் கிளைகள், கட்டார் ரியால்களை மாற்றுவதை நிறுத்தியுள்ளது என்று நேற்று முன்தினம் காலை செய்திகள் வெளியாகின. ஆனால், இதுதொடர்பாக இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

வழக்கம் போல கட்டார் ரியால்களை மாற்றிக் கொள்ள முடியும் என்றும் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இதற்கிடையே, கட்டார் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படவில்லை என்றும், இதனால், எந்த அச்சமும் கொள்ள வேண்டியதில்லை என்றும் கட்டாரில் உள்ள இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி. லியனகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கட்டாரில் உள்ள இலங்கையர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது இலங்கை மீது பாதிப்பை ஏற்படுத்தாது என்பதால், எந்த அச்சமும் கொள்ள வேண்டியதில்லை.

கட்டாரில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் கட்டார் மன்னருடன் நிலைமைகள் தொடர்பாக பேச்சு நடத்தியுள்ளனர்.

நிலைமைகள் தொடர்பாக கட்டாரில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்குத் தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

பல விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளமையால் விமான நிலையத்தில் பெருமளவானோர் முண்டியடிக்கின்றனர்.

பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம் என்ற அச்சத்தில் பெருவணிக நிறுவனங்களில் கூட்டம் அலைமோதுகிறது.

ஆனால், சிறிலங்கன் விமான சேவை தொடர்ந்து அட்டவணைப்படி சேவைகளை மேற்கொள்கிறது. பொருளாதாரத் தடையும் விதிக்கப்படவில்லை எந்த அச்சமும் கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தொழிற்சாலை இயந்திரங்களை விற்ற மோசடி: முன்னாள் இராணுவத் தளபதியிடம் விசாரணை!

கொழும்பு, ஜூன் 08

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இருந்த பெரிய இயந்திரங்களைப், பழைய இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்கவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக விசாரணைக்காக முன்னிலையாகும் படி, பெரும் ஊழல்கள், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு, முன்னாள் இராணுவத் தளபதிக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 1990ஆம் ஆண்டு தொடக்கம் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த இந்த தொழிற்சாலையில் இருந்த பெரிய இயந்திரங்கள், 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்து, ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் பழைய இரும்புக்காக கொண்டு செல்லப்பட்டன.

இந்த இயந்திரங்களை பழைய இரும்புக்காக விற்பனை செய்து, மில்லியன் கணக்கான ரூபாவை மோசடி செய்ததாக உயர்மட்ட பாதுகாப்பு மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளுக்கே, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் பலரையும் விசாரணைக்கு அழைக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## யுத்தம் முடிந்தாலும் இனவாதம் ஓயவில்லை என்கிறார் ஹக்கீம்!

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் இனவாதச் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன என்று அமைச்சர் ரவூக் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் இடம்பெற்ற நீண்ட கால யுத்தமானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் இன்னமும் இனவாதம் அப்படியே தான் இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை தொடருந்துத்துறை அபிவிருத்திக்கு 32 கோடி டொலர் கடன் வழங்குகிறது இந்தியா!

இலங்கையின் தொடருந்து துறையை அபிவிருத்தி செய்வதற்காக 31.8 கோடி டொலரைக் கடனாக வழங்குவது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இலங்கை நிதியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில், நிதியமைச்சின் செயலர் சமரதுங்கவும், இந்தியாவின் எக்சிம் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் ரஸ்கின்காவும் புரிந்துணர்வு உடன்பாடுகளில் கையெழுத்திட்டனர்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இலங்கையின் தொடருந்து துறையை அபிவிருத்தி செய்வதற்காக 31.8 கோடி டொலர் கடன் திட்டத்தை வழங்குவதாக அறிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியின் மூலம் இலங்கையின் தென்பகுதி மற்றும் வடபகுதி தொடருந்துப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், இந்தியாவில் இருந்து தொடருந்துகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதேவேளை, இந்தியா ஏற்கனவே இலங்கையின் தொடருந்துத்துறை அபிவிருத்திக்காக 99 கோடி டொலர் பெறுமதியான நான்கு கடன் திட்டங்களை எக்சிம் வங்கி ஊடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மாவுடன் வெளிவிவகார அமைச்சர் ரவி முக்கிய பேச்சு!



கொழும்பு, ஜூன் 08

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது இருதரப்பு உறவுகள் தொடர்பாக பல முக்கியமான விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தப்பட்டது என்று புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தப் பேச்சுக்களின் முக்கியத்துவம் பெற்றிருந்த விடயங்கள் குறித்து இன்னமும் இரண்டு நாடுகளும் அதிகாரபூர்வமாக எதையும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் நேற்றும் புதுடில்லியில் முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பதில் பிரதம நீதியரசர் நியமனம்



பதில் பிரதம நீதியரசராக ஈவா வனசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுமுன்தினம் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். ஈவா வனசுந்தர சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் சட்ட மா அதிபர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 08.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 25 ஆம் நாள் சதுர்த்தசித்திதி மாலை 4.16 மணி வரை. நட்சத்திரம் அனுஷம். பி.இ 2.14 மணி வரை. பின்னர் கேட்டை. சித்தயோகம் பி.இ 2.14 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்:பகல் 1.44 முதல் 3.18 மணி வரை.சுபநேரம்: காலை 7.23 மணி முதல் 8.53 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: வைகாசி மாத வளர்பிறை சதுர்த்தசி. பிறந்த நட்சத்திரவழிபாடு - அனுஷம்.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சஞ்சலமான நாள். மனக்குழப்பம், கவலை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சோம்பலால் பணிகளை ஒத்திப்போட்டு பிறகு அவசர கதியில் செயலாற்ற வேண்டியிருக்கும். இல்லத்தில் பனிப்போர் நிலவும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. சுமாராக இருக்கும். பணியில் எவரையும் நம்பி செயலில் இறங்காதிருப்பது சாலச் சிறந்தது. கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். நூதன புதிய முயற்சிகள் மூலம் வியாபாரம் விருத்தியாகும். சுபகாரியங்கள் இவர்களின் சந்தோசத்தையும், பரபரப்பையும் அதிகமாக்கும்.

**கடகம்** : அனுகூலமான நாள் ஆகும். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு அனுகூலமாகும். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உருவாகும்.

**சிம்மம்:** சலனம் மிகுந்த நாள். மனம் சஞ்சலம் அடையும். தொழிலில் பல நெருக்கடிகளால் மனம் வேதனைப்படும்.

**கன்னி:** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்ததைவிட லாபம் கனிசமாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும்.

**துலாம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். வியாபாரிகள் விரிவாக்கம், வாடிக்கையாளர்கள் என்று சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். புதிய வீடு,வாகனம் வாங்கும் பாக்கியம் கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**தனுசு:** யோசனையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதம் ஆகும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகும். வியாபாரம் மந்த கதியில் நடக்கும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தனவரவு சுமாராக இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கம் எடுக்க வேண்டும். வியாபாரம் சுமாராக நடக்கும்.

**கும்பம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணவருவாய் அதிகரிக்கும். வியாபாரத் தொழிலில் வளர்ச்சி உண்டாகும்.

**மீனம்:** கவலையான நாள். பணவருவாய் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழில் செய்யும் பெண்களுக்கு பல விரும்பத்தகாத தொந்தரவுகள் உண்டாகும்.

சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# வடக்கு, கிழக்கு வெற்றிடங்களுக்கு தென்பகுதியினரை நியமிக்க வேண்டாம்

## அரசை வலியுறுத்துகிறார் சாந்தி எம்.பி.

கொழும்பு, ஜூன் 08

வடக்கு, கிழக்கில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அந்தப் பகுதிகளில் உள்ள கல்வி கற்ற, உரிய தகுதியுடன் உள்ளவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



வடக்கு,கிழக்கில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு தென் பகுதியில் உள்ளவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

போர்க் காலங்களிலும் கல்வி கற்று, தகுதியுடையவர்கள் அங்கு காணப்படுகின்றபோதும் அவர்கள் உள்வாங்கப்படவில்லை.

இதனால் அங்கு தொடர்ந்தும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அத்துடன், அந்தப் பகுதியில் உள்ள தகுதியுடைவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாது அந்த மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.-என்றார். (எ)

# அரசு செய்யும் அபிவிருத்திகளைக் காட்டி இலாபமடையும் மலையகத் தலைவர்கள்

## குற்றஞ் சுமத்துகிறார் நுவரெலியா சு.க. அமைப்பாளர்

ஹற்றன், ஜூன் 08

மலையகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் அரசால் செய்யப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களைக் காட்டி தங்களது தொழிற்சங்கங்களை விஸ் தரித்துக் கொள்கின்றனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்நுவரெலியாமாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

மலையக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக தெளிவூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் மாலை ஹற்றன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீடமைப்பு அமைச்சர் திகாம்பரம் தற்போது வீடுகளைத் தங்கள் தொழிற்சங்கத்தில் உள்ளவர்களுக்கே வழங்கப்படவுள்ளன என்று தெரிவித்து வருகிறார்.

அத்தோடு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் போன்றவர்களும் பொய்ப் பிரசாரங்களைச் செய்து ஆட்சேர்த்து வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவரது தனிப்பட்ட கட்சி வளர்ச்சிக்கும் தொழிற்சங்க வளர்ச்சிக்கும், நிதி வழங்கவில்லை. அவர் இன, மத, மொழி மற்றும் அரசியல் பேதமற்ற நிலையிலேயே நிதி ஒதுக்கி வருகிறார்.

எனவே, அபிவிருத்தித் திட்டங்கள் யாவருக்கும் பொதுவானவை என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.-என்றார். (எ)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஒரே நேரத்தில் பங்களியுங்கள்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜயசுந்தர வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 08

சிங்கள-தமிழ் புத்தாண்டை ஒரே நேரத்தில் சம்பிரதாய நிகழ்வுகளை முன்னெடுப்பது போல் தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கையிலும் நாட்டிலுள்ள சகல மக்களும் ஒரே நேரத்தில் பங்கெடுக்குமாறு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜே.எம். டபிள்யு. ஜயசுந்தர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என்னுடைய வீட்டிலும் டெங்கு நுளம்பு பெருகும் இடம் ஒன்றை சுகாதார பரிசோதனை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

டெங்கு நுளம்பை ஒழிப்பதற்கான வேலைத்திட்டம் மூன்று மாதங்களுக்கு தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது. இக்காலப் பகுதிக்குள் அறிவிக்கப்படும் ஒரு தினத்தில் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இந்த அறிவிக்கப்பட்ட தினத்தில், பாதையில் பயணிக்கும் ஒவ்வொருவரும் அவர் செல்லும் இடத்தில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். வீட்டில்இருப்பவர்கள்வீட்டைச் சுற்றி காணப்படும் இடங்களில் டெங்கு பரவும் இடங்களை ஒழிப்பதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.-என்றார். (எ)

# 2019 இல் மீன்பிடித்துறையில் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள்!

## உறுதியளித்தார் கடற்றொழில் அமைச்சர்

மீன் பிடித்துறையில் 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர், ஒரு லட்சத்து 20 ஆயிரம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதியளித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டையில், 'நண்டு நகரம்' எனும் பெயரில் புதிய நீரியல்வள தொழிற்பேட்டை அமைக்கப்படும். அதில், 20 ஆயிரம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அத்துடன், மன்னாரில் 3 ஆயிரம் ஏக்கரிலும் மட்டக்களப்பில் 2 ஆயிரம் ஏக்கரிலும் அமைக்கப்படவுள்ள நீரியல்வள கைத் தொழிற் பேட்டைகளில், 40 ஆயிரம் வேலைவாய்ப்புகள் புதிதாகக் கிடைக்க உள்ளன.

இதேவேளை, கப்பற் தோட்ட நீரியல்வள இனப்பெருக்க மையம் மற்றும் நீர்த்தேக்கங்கள், வாவிகளில், மீன் மற்றும் நீர்த் தாவர உணவு மையத்தின் ஒத்துழைப்புடன் மீன்பிடியை 100 சதவீதம் உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், மேலும் 60, ஆயிரம் வேலைவாய்ப்புகள் கிடைக் கும்.-என்றார். (எ)

# யாழ்ப்பாணம், நீராவியடி
# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்
## தேர்த்திருவிழா சிறப்பிதழ்- 08.06.2017



## நீதி அறம் தூயவழி சமாதான அமைதி நீராவி கேணியடி பிள்ளையாரே தருகவே!

விக்கினம் போக்கும் சிவசக்தி ஈஸ்வரா விக்கினேஸ்வரனே நீராவிகேணியடியோனே
விளங்கு யாழ்.நகரோனே வெற்றிப் பிள்ளையாரே விண்ணை சிவபெரு நாயகன் தலைமகனே
துக்க நிவாரணியே துயர்களைதருவே தெய்வரத்தினரோனே சிவ ஆகம வேதஞானி
தர்மத்தின் காவலா நல்வாழ்வின் தலைவா தெய்வ உயிரினது சிவ அரனே ஓங்காரா
பக்துவமாக்கியே சிவமாக்கும்தேவே பூசைசெய்த ஔவைக்கு கைலாசம் காட்டியவா
பரன் சக்தி நடுவே ஞானப்பழமானவனே பாச முருகனுக்கு சமாதான கணபதியே
நெக்குருகும் உன் பக்தர் இதயமே நினதுகோவிலாகும் தெய்வஅருளாளவா
நீதிஅறம் தூயவழி சமாதானம் அமைதி நித்தம் தரும் சிவ ஏகதந்தா வருகவே!

என்.தமிழ்மகன் (நந்தகுமார்) குருக்கள் (பீ.ஏ)



## அருளாசிச் செய்தி

யாழ். நீராவியடி வீரகத்தி விநாயகப் பெருமானுடைய தேர்த்திருவிழா சிறப்பிதழுக்கு அருளாசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். எமது பாவங்களையும் துன்ப துயரங்களையும் அறவே அழித்தொழிப்பதற்காக இன்று விநாயகர் தேரிலே ஆரோகணிக்கின்றார்.

அழகாயமைந்த அற்புதமான சித்திரத் தேரிலே விநாயகப் பெருமான், அழகாக ஆரோகணித்து வருகின்ற அருட்காட்சி காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்து நிற்கும் நாம், இன்று விநாயகரின் தேர்த்திருவிழா கண்டு உள்ளம் பூரிக்கின்றோம்.

இந்த நீராவியடிப் பதி எத்தனையோ பெரியார்கள் வாழ்ந்த இடம். அந்த வகையில் இன்று நிகழும் தேர்த்திருவிழாவும் எத்தனையோ அடியார்களெல்லாம் ஒன்று கூடி நின்று நடத்தப் படுகின்ற ஒரு பொன்னான விழாவாகும். கைதொழும் அடியார்களின் வினையகற்றி நல் வாழ்வருளும் நீராவி வீரகத்தி விநாயகரின் தேர்த்திருவிழா நல்ல முறையில் நிகழ்ந்து சிறப்புற வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்று நல்விழாக் காணும் அவரது அடியார்கள் எல்லோரும் மங்கள சுபீட்ச நல் வாழ்வில் திளைத்து இன்புற வேண்டுமென்று வீரகத்தி விநாயகரின் திருவடி பணிந்து அருளாசி வழங்கி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குரு முதல்வர்.

## எம் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுவோம்!

ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் மஹோற்சவம் எனப்படுகின்ற பஞ்ச கிருத்திய உண்மைகளைப் புலப் படுத்தும் இந்த விழாக்களில் 'இரதோற்சவம்'(தேர்த் திருவிழா) சங்காரம் (அழித்தல்)- உயிர்களை இளைப்பாற்றுவதற்குச் செய்யும் பேரருட் செயல் - என்ற தத்துவத்தைத் தெரிவிக் கின்றது. தேர்த்திருவிழா சிவபெருமான் 'திரிபுரதகனம்' செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துகின்றது.

இந்த உடம்பு ஒப்பற்ற ஒரு தேர். உயிர் உடம்பை இயக்கிக் கொண்டு இருக்கின்றது. உடல் வெறும் சடம். உடலாகிய தேரை இயக்குவது உயிர் என்பதை உடல் அறிவதில்லை. உயிரும் உண்மையில் ஒரு தேர். உயிர்க்கு உயிராகிய இறைவன் உயிராகிய தேரில் வீற்றிருந்து இயக்குகின்றான். இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேர். இந்த உண்மைகளை உணர்பவர்கட்டு 'ஞான நிலை' சித்திக்கும்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும்வெளியேயும் நின்று, அதனைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளும் இறைவனின் திருவருட் தரிசனத்தை பக்தர்கள் கண்டு இன்புறும் நாள் தேர்த திருவிழா ஆகும்.

திருவிழாக் காலத்தில் இறைவன் தம்பம் (கொடிமரம்), விம்பம் (மூர்த்தியின் திருவுருவம்), கும்பம் ஆகிய மூன்று இடங்களிலும் வெளிப்பட்டு அருள் செய்வான். திருவருளைப் பெறும் அடியவர்கள் சிவ விளக்கம் பெற்று ஆன்மீகத்தில் சீரோங்கி வாழ்வார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பதங்களில் நிற்போர் அந்தந்தப் பதங்களுக்குரிய பேறுகளைப் பெறுவார்கள். ஏனையோரும் அவ்ரவர் பக்தியின் அளவுக்கு ஏற்பத் திருவருள் நலன் பெற்றுச் சிவ நெறியில் நிற்பார்கள். பக்குவம் அடைந்த ஆன்மாக் களை இறைவன் முக்தியில் சேர்க்கின்றான்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பல்வகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. இந்த ஆண்டும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானைச் சித்திரத் திருத் தேரில் தரிசித்து இஷ்ட சித்திகளைப்பெற்றுஎங்கள் வாழ்க்கையை வளம்பெறச் செய்வோமாக.

வை.இரகுநாத முதலியார்,M.Sc.
செயலாளர், சைவ பரிபாலன சபை

## விநாயகர் பதம் பணிந்து போற்றுவோம்

யாழ்ப்பாணம் நீராவிப் பதியுறையும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா. அழகிய சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வரும் விநாயகரின் பேரழகு சொல்லி முடியாது. தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு அவர் அருள்புரியும் பாங்கு அற்புதமானது; அளப்பரியது.

அருள்வேண்டி நிற்கும் அடியார்கள் இருமருங்கும் வடம் பிடித்து இழுத்து வர, மங்கல இசை முன்னே முழங்க இன்று நிகழுகின்ற தேர்த்திருவிழா இனிதே சிறப்புற விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்; பதம் பணிந்து போற்றுவோம்.

அறிஞர்கள் பலர் வாழ்ந்த, வாழுகின்ற புண்ணிய ஷேத்திரம் நீராவியடி. இந்த மண் பல பெரியார்களைக் கண்ட மண். ஜெயம் என்றால் வெற்றி. ஆகவே ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரை வணங்கினால் எதிலும் என்றும் வெற்றி நிச்சயம். அந்த வகையில் விநாயகப் பெருமானுடைய இன்றைய தேர்த்திருவிழாவானது மகோன்னத வெற்றியுடன் சிறப்புற நிகழ, அவரின் அற்புத கற்பக பொற்கமல பாதம் பணிந்து வாழ்த்தி நின்று மகிழ்கின்றோம்.

"வேழ முகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

'தெய்வத் தமிழ்ச்சுடர்',
கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.


Golden Eagle kt (pvt) Ltd
(approved by the ministry of Defence)
Our Services
• Golden Eagle Security
• Gallop man power
• Gaily Cleaning
201/7, Navalar Road, Jaffna
Phone - 021 222 5102
Fax - 021 222 1290
E.mail -goldeneaglekt@gmail.lk
Chairman & Managing Director K.Thormakulasingam
Director Mrs.Neela Thormakulasingam

நீராவியடி வீரகத்தி விநாயகரின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்

யாழ்.காலணியகம்
YARL TRADES CENTER
Agents For Bata
யாழ்.பாட்டா
YARL Bata
11,modern Market, Hospital Road,Jaffna

SRI Mathavan
Cycle Cycle Spare Parts
No.97, Kasthuriyar Road., Jaffna

கோசலா சாரதி பாடசாலை
Kosala Driving School
அரச அங்கீகாரம்பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
Kandy Road, Chavakachcheri, T.p.021 790 3422
Main Rada, Chankanal T.p-077 704 8585
No.215, 2nd cross Street, Jaffna, T.p - 021 790 3351

வெஸ்ரின் பாமசி
பேபி நீட்ஸ்
பிரதான வீதி, சங்கானை

சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
பிரபல கட்டடப்பொருள்கள் விற்பனையாளர்
இல.55,57, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
021 222 2901, 021 222 5003

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி ஜோதிட நிலையம் (PVT) Ltd.
P.ஜெய்சங்கர்
கடந்த கால, நிகழ்கால, எதிர்காலம் போன்றவற்றைக் கூறுகிறது.
தொடர்பு : 021 221 7944
நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்.

குறைந்த செலவில் கனடாவில் உயர் கல்வியைத் தொடர
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

N.V.S
மல்ரி சொப்
பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புப் பொருள்கள்
போட்டோக் கொப்பி and பிறிண்டிங்
E-mail & scan
Reload & Kit card

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
நீராவியடி, யாழ்ப்பாணம்
சகலவிதமான கைவினைகளுக்கும் மண்டப வசதி மற்றும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.




பொன்.வேணு கிருஷ்ணா

### தெற்காசியாவின் அணு ஆயுத வல்லமை

மேற்கத்திய ஊடகங்கள் தங்கள் கவனம் மொத்தத்தையும் ட்ரம்ப்பின் மத்திய கிழக்கு விஜயத்தின்( அதனை அவர் ஈரானை மிரட்டுவதற்காக பயன்படுத்திக் கொண்டார்) மீதும், நேட்டோ உச்சிமாநாட்டின் (-அங்கே அவர் ஜேர்மனியின் மீது தாக்கினார்-) மீதும் குவித்திருக்கும் நிலையில்,



தெற்காசியாவின் அணுஆயுதவல்லமை கொண்ட இரண்டு போட்டி நாடுகளான இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் மோசம் என்பதில் இருந்து படுமோசம் என்ற நிலைக்குச் சென்றிருக்கிறது.

அண்மையில்(27 May 2017) இந்தியா பாகிஸ்தான் இரண்டு நாடுகளுமே ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து தம்பட்டம் அடித்துக் கொண்டன. சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் "தண்டிக்கும் துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களில்" பாகிஸ்தான் இராணுவத்தின்முன்னணிநிலைகளை, தான் அழித்து விட்டிருந்ததாகக் கூறியதற்கு ஆதரவான காணொலியை செவ்வாயன்று இந்திய இராணுவம் வெளியிட்டது. பாகிஸ்தான்இந்தக்கூற்றை மறுத்ததோடு, இந்தியாவையும் பாகிஸ்தானிடம் இருக்கும் காஷ்மீரையும் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் தனது சொந்த ஆட்லறி குண்டுவீச்சைக் கொண்டு அதனினும் பெரிய சேதத்தை விளைவித்திருந்ததாக காட்டுகின்ற தனது சொந்த காணொலியை வெளியிட்டது.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஊடுருவிய இரண்டு பாகிஸ்தான் வீரர்களை தனது இராணுவம் கொன்றுவிட்டதாய் இந்தியா கூறியது. அப்படியொரு எந்தச்சம்பவமும் நடக்கவில்லை என்று இஸ்லாமாபாத் மறுத்தது.

இந்தக் கூற்றுகள் எதிர்கூற்றுகளின் மோதலுக்கு மத்தியில், இரண்டு நாடுகளுமே மேலும் மேலும் ஒரு போர் முனைப்பில் பயணித்துக்கொண்டிருக்கின்றன. "மிகக் குறுகியகால அறிவிப்பின்" கீழ் நடவடிக்கைகளுக்குத் தயாராக இருக்கும்படி 12 ஆயிரம் இந்திய விமானப் படை அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தி இந்திய இராணுவ உயர் தலைமையிடம் இருந்தான ஒரு கடிதத்திற்கான பதிலிறுப்பாக பாகிஸ்தான் தனது முன்னிலைவான்தளங்கள் அத்தனையையும் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

### "விஸ்வரூபம் எடுக்கும் அணுஆயுதப் போர்?"

As if India and Pakistan were short of potential wars, the two sides have been busy fighting a miniscule battle over the Line of Control and the Working Boundary for the last three years. Yet there has been a sudden surge in the intensity of cross-border firing in the wake of the Indian allegation that some of its fallen soldiers had their bodies mutilated by the Pakistan Army.

Pakistan's armed forces vehemently denied the charge. This, however, appeared to fall on deaf ears as the Indian Army chief proceeded to warn of dire consequences. Not only that, he made the audacious claim of having destroyed an army checkpost on the Pakistani side of the LoC. In an expected tit-for-tat rejoinder & Pakistan wasted no time in releasing footage of incident to debunk the big talk.







பாகிஸ்தான் தினசரியான டெய்லி டைம்ஸ் "விஸ்வரூபம் எடுக்கும் அணுஆயுதப்போர்?" என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் வெளியிட்டது. பாகிஸ்தானிடம் மரபுவழிப் படை வலிமை குறைவாக இருக்கின்ற காரணத்தால் பாகிஸ்தானின் இருதயத்தானமான இஸ்லாமாபாத்தின் மீது ஒரு பெரிய மின்னல்வேகத் தாக்குதலை தொடுக்க இந்தியாவை அழைக்கின்ற தாட்சண்யமற்ற தொடக்க (Cold Start) இராணுவ மூலோபாயத்தை இந்தியா அமுல்படுத்துமானால், அப்போது அணுஆயுதங்களைப்பயன்படுத்துவது" என்ற ஒரேயொரு தெரிவு மட்டுமே "காட்சியளிப்பதாய் இருக்கும்" என்று அது எச்சரித்தது. இந்தியாவின் படையெடுப்பு தந்திரோபாய அணு ஆயுதங்களைக் கொண்டு எதிர்கொள்ளப்படும் என்று பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் தொடர்ச்சியாக சூளுரைத்து வந்திருக்கிறார்.

### அண்டைநாடான சீனாவுடனான இந்தியாவின் உறவுகளும் மோசமாகவே இருக்கின்றன

வடக்கு அண்டைநாடான சீனாவுடனான இந்தியாவின் உறவுகளும் மோசமாகவே இருக்கின்றன. இரண்டு நாடுகளுமே தமக்கிடையேயான சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் இராணுவப் படைகளையும் உட்கட்டமைப்பையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றன என்பதோடு தெற்கு மற்றும் தென்-கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு எங்கிலும் ஆதார வளங்கள், சந்தைகள் மற்றும் புவியரசியல் செல்வாக்கிற்கான அதிகரித்துச் செல்லும் கடுமையானதொரு மூலோபாயப் போட்டியில் இரண்டும் ஈடுபட்டுள்ளன.

இந்தியாவின் ஆளும் உயரடுக்கு அதன் பரம எதிரியான பாகிஸ்தானுக்கு, சீன இராணுவ மற்றும் பொருளாதார ஆதரவளிப்பதை கடுமையாக எதிர்க்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவின்எழுச்சியை மட்டுப்படுத்துவதற்கும், தேவைப்பட்டால், இராணுவரீதியாக அதனை முறியடிப்பதற்குமான தனது முயற்சிக்காய் இந்தியாவை பட்டை தீட்டுவதில் முனைப்புடன் இருக்கிறது




அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவின் எழுச்சியை மட்டுப்படுத்துவதற்கும், தேவைப்பட்டால், இராணுவரீதியாக அதனை முறியடிப்பதற்குமான தனது முயற்சிக்காய் இந்தியாவை பட்டைதீட்டுவதில் முனைப்புடன் இருக்கிறது என்ற முழுவிழிப்புடன் இருக்கும் சீனா, நீண்டகாலமாகவே இந்தியாவுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கே முனைந்து வந்திருக்கிறது. ஜப்பானிய அடாவடித்தனங்களாகவும் ஆத்திரமூட்டல்களாகவும் அது கருதிய விடயங்களில் அது பதிலடி கொடுத்த அதே நேரத்தில், இந்தியாவுடனான கருத்து வேறுபாடுகளை அது தணித்தே காட்டி வந்திருக்கிறது.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது பாரதிய ஜனதாக் கட்சி அரசின் கீழான இந்தியா, தன்னை முன்னிலும் முழுமையாக சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ-மூலோபாயத் தாக்குதலுக்குள் ஒருங்கிணைத்துக் கொண்டுவிட்டிருக்கும் நிலையில், பெய்ஜிங்கினுடைய அணுகுமுறை ஒரு திட்டவட்டமான மாற்றத்தை அடைந்திருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகாலத்தில், இந்தியாவும் சீனாவும் அடுத்தடுத்த தூதரக அளவிலான வாய்ச்சண்டைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றன, மறைமுகமாகவும்,வெளிப்படையாகவும் இரண்டு நாடுகளும் இராணுவ மிரட்டல்களைப் பகிரங்கமாக பரிமாறிக் கொள்ளவும் தொடங்கியிருக்கின்றன. இந்தியா சமீபத்தில் 5,500-8,000 கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கக்கூடிய - சீனாவின் எந்த மக்கள்தொகை மிக்க மையத்தையும் குறிவைத்து அணுமுனை ஏவுகணைகளை செலுத்தும் திறன் கொண்டிருக்கும்-அக்னி V" பெருவெடி ஏவுகணை சோதனை செய்ததற்கு சீனா கோபத்துடன் எதிர்வினையாற்றியது. சென்ற ஜனவரியில் இந்திய இராணுவத்தின் தலைவராக ஆன ஜெனரல் பிபின் ராவத் ஒரேநேரத்தில் சீனா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் எதிரான ஒரு இரு-முனை போருக்கும் இந்தியா தயாராக இருப்பதாக பெருமையடித்துக் கொண்டார்.

(கேள்வி தொடரும்)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



170

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### இடைக்கால நிர்வாகம் பற்றிக் கோரிக்கை

மே மாத நடுப்பகுதியில், பிரபாகரனைச் சந்திப்பதற்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சன் கிளிநொச்சி வரவிருக்கிறார் என எமக்கு அறிவிக்கப்பட்டது. பிரபாகரனுக்கு உதவியாக பீட்டர்சனை நான் சந்திக்க இருந்த சமயத்தில் திடீரென எனக்கு சுகவீனம் ஏற்பட்டது. நீண்ட தூர பயணங்களும், கடும் வேலைப் பளுவும், தூக்கமற்ற அலைச்சலுமாக உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. எனக்கு ஓய்வு அவசியம் என மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். கடுமையான சுகவீனத்துடன் நான் வன்னியில் தங்கியிருக்கின்றமையைப் பிரபாகரன் விரும்பவில்லை. எனது சிக்கலான சிறுநீரக நோய்க்கு வன்னியில் மருத்துவ வசதிகள் இல்லாதமையால் உடனடியாக லண்டனுக்குச் சென்று சிகிச்சை பெற்று ஓய்வு எடுப்பதையே பிரபாகரன் விரும்பினார். அதனால், மே மாதம் 11 ஆம் நாள் நான் அவசரமாக லண்டன் திரும்பினேன்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீட்டர்சன், உதவி அமைச்சர் ஹெல்கிசன், கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் ஆகியோர் மே மாதம் 15 ஆம் நாள் கிளிநொச்சிக்கு வருகைதந்து பிரபாகரனைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் புலிகளின் தலைவருக்கு உதவியாகத் தமிழ்ச்செல்வன், சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், பொருளாதார அபிவிருத்தி நிபுணர் கலாநிதி மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இன நெருக்கடியில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பினர் என்பதாலும், உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய மாநாட்டில் வடக்கு கிழக்கின் புனர்வாழ்வுக்கும் அபிவிருத்திக்குமாகப் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவிருப்பதாலும், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குகொள்வது அவசியம் என பீட்டர்சன் எவ்வளவோ வலியுறுத்தியும், பிரபாகரன் தனது நிலைப்பாட்டிலிருந்து நெகிழ்ந்து கொடுக்கவில்லை. சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் பற்றி நோர்வே அரசின் பிரதிநிதிகள் பிரபாகரனிடம் விசாரித்தனர். தமிழர் தாயகத்தில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளைச் சிறப்பான முறையில் செயற்படுத்தக் கணிசமான அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதைப் பிரபாகரன் வலியுறுத்தினார். விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் இடைக்கால நிர்வாகசபை வரைபு ஒன்றை விக்கிரமசிங்கவின் அரசு சமர்ப்பித்தால் அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் எனப் பிரபாகரன் உறுதியளித்தார்.

நான் லண்டனில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த வேளையில் மே 17 ஆம் நாள் கிளிநொச்சிக்கு மீண்டும் விஜயத்தை மேற்கொண்ட ஹெல்கிசன், ஓர் இடைக்கால நிர்வாக கட்டமைப்புச் சம்பந்தமாக இரண்டு பக்கத்தில் ஒரு வரைபு ஒன்றைத் தமிழ்ச்செல்வனிடம் சமர்ப்பித்தார். லண்டனில் உள்ள எனக்கும் ஒரு பிரதியை நோர்வே அரசு அனுப்பியிருந்தது. அந்த வரைவைப் படித்து பதில் அனுப்புமாறு பிரபாகரன் என்னைப் பணித்தார். அந்த வரைபில் பிரமாதமாக எதுவுமே இருக்கவில்லை. சிரான் உப குழுவுக்கு





வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களைச் சிபாரிசு செய்வதாக அந்த வரைபு அமைந்தது. அதனை அடிப்படையாக வைத்துப் பேசி, ஒரு கட்டமைப்பைப் படிப்படியாக உருவாக்கலாமெனவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. 2003 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஹெல்கிசனுக்கு, இயக்கத்தின் சார்பில் நான் எழுதிய பதிலில் அந்த நகல் திட்டத்தை நிராகரித்தேன். ''வடக்கு - கிழக்கில் மனிதாபிமான, அபிவிருத்திப் பணிகளைத் துரிதகெதியில் செயற்படுத்தவல்லதும் போதுமான நிர்வாக அதிகாரங்களையும் சட்டத் தகைமையையும் கொண்டுள்ளதுமான ஒரு புதுமையான கட்டமைப்பையே பிரபாகரன் விரும்புகின்றார். இதனையே அவர் உங்களது வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தார்.'' - எனக் குறிப்பிட்ட நான், ''நீங்கள் சமர்ப்பித்த வரைபு அவரது எதிர்பார்ப்பு எதனையுமே திருப்தி செய்வதாக இல்லை'' என விளக்கியிருந்தேன். எமது தலைவரின் எதிர்பார்ப்புக்கு அமைவாக ஓர் உருப்படியான திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்வைக்குமானால், அதன் அடிப்படையில் பேச்சுகளை மீளத் தொடங்குவது பற்றிப் பரிசீலனை செய்வோம் எனவும் எனது கடிதத்தின் முடிவுரையில் ஹெல்கிசனுக்குத் தெரிவித்தேன்.

2003 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் நாள் ரணில் விக்கிரமசிங்க, நோர்வே அனுசரணையாளர்கள் மூலம், புதிய யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்துக்கு அனுப்பிவைத்திருந்தார். அதனைப் படித்துப் பார்த்து பதிலளிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. ரணிலின் திட்ட வரைபிலும், பிரபாகரன் விரும்பியமை போன்று உருப்படியான நிர்வாக அதிகாரங்கள் எதுவும் இருக்கவில்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான ஓர் ஆலோசனைச் சபை போன்றே அதன் கட்டமைப்பு அமையப்பெற்றிருந்தது. மே மாதம் 30 ஆம் நாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் எழுதிய பதில் கடிதத்தில் அவரது திட்ட வரைவிலுள்ள குறைபாடுகளை விவரமாக விமர்சித்து, அதனை ஏற்கமுடியாதென நிராகரித்தேன்.

*''உங்களது யோசனைகளை ஆழமாகப் பரிசீலனை செய்து பார்த்தபோது எமக்கு ஒருபுறம் ஏமாற்றமும் மறுபுறம் ஆச்சரியமும் ஏற்பட்டன. விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்த யோசனைக்கு அமைவாக ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் திட்டத்தை நீங்கள் முன்வைக்கவில்லை. மாறாக, மிகவும் வரையறுக்கப்பட்ட நிர்வாக அதிகாரங்களைக் கொண்டதாக, அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அமைப்பையே நீங்கள் சிபாரிசு செய்துள்ளீர்கள். அதிலும் விடுதலைப் புலிகளுக்கான பங்கு தெளிவாக நிர்ணயிக்கப்படவில்லை. வேண்டுமென்றே அந்த விடயம் தெளிவற்றதாக விடப்பட்டிருக்கின்றது. நாங்கள் கோரியதும், நீங்கள் கொடுத்ததும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட யோசனைத் திட்டங்களாகும். அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஓர் அமைப்பை முன்மொழிந்ததன் மூலம் நாம் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நீங்கள் நிராகரித்து விட்டீர்கள் என்றே நாம் கருதுவோம். உங்களது அரசமைப்புக்குள் தஞ்சம் எடுத்துள்ள நீங்கள், தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்கால ஒழுங்கைத் தானும் வழங்குவதற்கு மறுக்கின்றீர்கள். நாட்டின் சட்டம், ஒழுங்குக்கு அமையவே உங்களது அரசு செயற்படமுடியுமென நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். பழிவாங்கத் துடிக்கும் ஜனாதிபதியின் பகைமை ஒருபுறமும், நெகிழ்த்த முடியாத இறுக்கமான அரசியல் யாப்பு மறுபுறமுமாக, இரண்டுக்கும் நடுவில் சிக்குண்டு தொங்கும் வலுவிழந்த உங்களது அரசின் நிலைமையை நாம் நன்கறிவோம். அரசமைப்பே உறுதி தளர்ந்து ஆட்டம் காணும் நிலையில் இருக்கும்போது - உங்களது நிர்வாகமும் அதிகாரமற்றதாக இயலாத நிலையில் இருக்கும்போது - தமிழரின் இனப் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வோ அன்றி நிரந்தரத் தீர்வோ காண்பது முடியாத காரியம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். அரசமைப்பு முட்டுக்கட்டைகளைக் காரணங்காட்டி, உங்களது அரசு எதையுமே செய்ய முடியாது என முடங்கிப் போனால், துன்பங்களைச் சுமந்து நிற்கும் எமது மக்கள் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காப்பார்? எமது மக்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகளை மறுப்பதில் சிங்கள ஆளும் வர்க்கங்கள் ஒன்றோடு ஒன்று போட்டி, வெறித்தனமாகப் போராடி வந்த வேளை, எமது மக்கள் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகப் பொறுத்திருக்கவில்லையா?''*

- என்று எனது கடிதத்தில் சுட்டிக்காட்டினேன்.

(தொடரும்...)

பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட

# சமுத்திரங்களைப் பேணுவோம்

இன்று (ஜூன் 08) உலக சமுத்திர தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.





> சமுத்திரங்களால் மக்களுக்கு ஏற்படும் சேவைகள் விசாலமானவை. அதேநேரம் பெரும் அழிவுகளையும் நொடிப்பொழுதில் இந்த சமுத்திரங்கள் ஏற்படுத்தி விடும்

உலகின் உணவுப் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் உயிர்களின் வாழ்க்கை, காலநிலையின் பிரதான சக்தி என்பனவாகச் சமுத்திரங்களே விளங்குகின்றன:

மாசடைவுகள், அகழ்வுகள் மற்றும் உலக வெப்பமயமாதல் அளவுக்கதிகமான மீன்பிடிச் செயற்பாடுகள் காரணமாக உலக சமுத்திரங்களில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் பிரகாரம், உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் மூகமாக 2008 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், 2009 ஆம் ஆண்டிலிருந்து ஜூன் மாதம் 8 ஆம் திகதி உலக சமுத்திர தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

பொதுவாகப் புவி மேற்பரப்பிலுள்ள சமுத்திரங்கள் தனித்தனியானவை எனக் கொள்ளப்பட்டு வந்தாலும், அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவையாகும். இவ்வாறு சமுத்திரங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கட்டற்ற பரிமாற்றங்களைக் கொண்ட ஒரே உலகச் சமுத்திரம் என்னும் எண்ணக்கரு கடலியலில் அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகின்றது. முதன்மையான சமுத்திரங்களின், ஒரு பகுதி கண்டங்களாலும், தீவுக் கூட்டங்களாலும், ஏனைய பகுதி இயற்கை நீதிகளினாலும் வரையறுக்கப்பட்டுள்ளன.



உலகில் பசிபிக் சமுத்திரம், அட்லாண்டிக் சமுத்திரம், இந்து மகா சமுத்திரம், அன்டாட்டிக் சமுத்திரம்,ஆர்க்டிக் சமுத்திரம் என ஐந்து சமுத்திரங்கள் காணப்படுகின்றன. பசுபிக் மற்றும் அத்திலாந்திக் சமுத்திரங்களை புவிமையக் கோட்டை வைத்து வடக்குத் தெற்குப் பகுதிகளாகப் பிரிப்பதும் உண்டு.சமுத்திரங்களின் சிறிய பகுதிகள் கடல்கள், வளைகுடாக்கள், விரிகுடாக்கள் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவற்றைவிட நிலத்தால் சூழப்பட்ட சில உப்பு நீர் நிலைகளும் உள்ளன.

மக்கள் வாழ்வில் சமுத்திரங்கள் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் சமுத்திரங்கள் சம்பந்தமாக நாம் எவ்வாறான வழிகளில் பணியாற்ற முடியும் என்பது பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். அளவுக்கதிகமாக மீன் இனங்களை நாம் உணவாக உட்கொள்வதன் காரணமாகவும், மீன்களினதும் மற்றும் பெரும்பாலான கடல் உயிரினங்களினதும் தொகை குறைந்து வருகின்றன எனக் கூறப்படுகிறது. இன்னும் 12 வருடங்களில் மீன் இனங்கள் வெகுவாகக் குறைந்து விடலாம் என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நமது எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு நேரடியாகப் பங்கு கொள்வதற்கு இந்தத் தினம் எமக்கு அரிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

இந்தத் தினத்தில் புதிய மன நிலையுடன் தனிப்பட்ட மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடற்கரைகளின் சுத்திகரிப்பு, கல்வி சம்பந்தமான நிகழ்ச்சி நிரல்கள், வரைதல் போட்டிகள், திரைப்பட விழாக்கள், கடலுணவுகள் பற்றிய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது வாழ்வு சமுத்திரங்களில் எவ்வாறு தங்கியுள்ளது என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

சமுத்திரங்களால், மக்களுக்கு ஏற்படும் சேவைகள் விசாலமானவை. அதே நேரம் பெரும் அழிவுகளையும் நொடிப்பொழுதில் இந்தச் சமுத்திரங்கள் ஏற்படுத்தி விடும். உதாரணமாக 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையைக் குறிப்பிடலாம்.

கடல் வளங்கள் மக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய பங்காற்றுகின்றன. சமுத்திரங்கள், சர்வதேச வர்த்தக பாதைகளாகவும் விளங்குகின்றன. நாம் சுவாசிக்கும் தூய காற்றையும், உணவையும் வழங்கும் சமுத்திரங்கள் உலக நாடுகளின் பொருளாதாரத்தையும் ஊக்குவிக்கின்றன.இத்தகைய சிறப்புகளை கொண்ட சமுத்திரங்களைக் சிறந்த முறையில் பேணுகின்றமை ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



## ஆலய உற்சவங்கள்

ஆனைக்கோட்டை, ஜூன் 08

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் ஆலய மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும்.

15 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில், எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், மறு நாள் 22 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

★★★

அளவெட்டி, ஜூன் 08

அளவெட்டி கும்பிழாவளை விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழாவில், இன்றுவியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## வரணி வடக்கில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையக் கிளை

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் புதிய கிளை இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு, வரணி வடக்கு சிமிழ் கன்னணி அம்மன் ஆலய வீதியில் திறக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் ந.ரஞ்சனா, சிறப்பு விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ர.ரஞ்சனி, கௌரவ விருந்தினராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி எஸ்.சேதுராஜா ஆகியோர் கலந்துகொள்வார். (இ-45)


## விளையாட்டுக்கழகக் கட்டடம் திறப்பு

காரைநகர் ஒளிச்சுடர் விளையாட்டுக்கழக கட்டடத் திறப்பு விழா நேற்று புதன்கிழமை கழகத் தலைவர் வி.பத்மேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், J/48 கிராம அலுவலர் செல்வி நிரஞ்சனா தம்பிப்பிள்ளை, அம்பாள் கற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.இராஜச்சந்திரன், காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் ப. செல்வக்குமார், காரைநகர் பிரதேச வைத்தியசாலை அதிகாரி கே.ரட்ணசிங்கம் , சக்தி கல்வி மேம்பாட்டு இயக்குநர் நா. பராசக்தி,சக்தி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் செல்வி.ரி.மயூரியும், கௌரவ விருந்தினராக அ. கிருபாகரன், சி.சோமசேகரம்பிள்ளை, க.சிவசோதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் சிவகாமி அம்மன் கோவிலடி முன்றிலில் இருந்து அழைத்து வரப்பட்டு நுழைவாயில் பெயர்ப்பலகையை செல்வி. ரி.மயூரி திரை நீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தை காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் நாடாவெட்டித் திறந்து வைத்தார். (இ)

## வாசகர் கருத்து மேடை



### அலட்சியமாக நடக்காதீர்கள்!

வீதிகளில் அதிவேகமாகச் செல்லும் வாகனங்களின் சக்கரங்களுக்குள் அகப்படும் நாய் மற்றும் பூனை போன்ற பிராணிகளை வாகன சாரதிகள் கவனத்தில் எடுக்காது சென்று விடுகின்றனர். வீதியால் செல்லும் பயணிகள் சிலர், அவற்றை இழுத்து வீதியின் கரையில் ஒதுக்கிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள்.

பொதுநோக்கு மனப்பான்மை அடிப்படையில் இறந்து போன மிருகங்களை யாரும் அவ்விடத்தில மண்ணை வெட்டி அந்த மிருகங்களைப் புதைப்பதில்லை. இதில் மனவருத்தப்படக்கூடிய இன்னொரு விடயம் என்னவெனில், வீதி அருகில் இருக்கும் அந்த இறந்துபோன மிருகங்களின் உரிமையாளர்கள் கூட இது தம்மோடு சம்பந்தப்படாத விடயம் போன்று ஒதுக்கிவிடுகிறார்கள்.

சமீபத்தில் புதுக்குடியிருப்பு - கைவேலிச் சந்தியில் வாகனங்களின் சக்கரங்களுக்குள் சிக்குண்டு இறந்து போன பூனையொன்றை யாரோ தூக்கி மழைநீர் வழிந்தோடும் வாய்க்காலுக்குள் எறிந்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். பூனையின் உடல் பொருமி நிணநீர் வடியும்போதுதான், அதில் இருந்து எழும் துர்மணம் குறித்து விழிப்படைந்தார்கள். பூனை மழை நீர் வாய்க்காலுக்குள் கிடந்ததால், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரின் பார்வைக்கும் தென்படவில்லை.

வீட்டு மிருகங்களை வளர்ப்பவர்களுக்குப் பொறுப்புணர்வு இருக்க வேண்டும். நாம் வளர்க்கும் மிருகங்கள் வீதி விபத்தில் சிக்கி இறந்துவிட்டால் அவற்றை எடுத்து அடக்கம் செய்ய முன்வர வேண்டும். இறந்துவிட்டது. இனி நமக்கென்ன? என்று அலட்சியமாக இருப்பார்களானால், அதில் இருந்து எழும் துர்மணம் சுவாத்தியத்துக்கு கேடாகவும், சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிப்பதாகவும் அமையும். இனிவரும் காலங்களிலாவது அனைவரும் கவனத்தில் எடுத்துச் செயற்படுங்கள்.

புண்ணியமூர்த்தி
கைவேலி - புதுக்குடியிருப்பு

# சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வும் கண்காட்சியும்







வவுனியா, ஜூன் 08

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா பன்றிக்கெய்த குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை சுற்றுச்சூழல் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் வி.சிறிஸ் கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் தொடர்பான கண் காட்சி நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கே.பரந்தாமன் கலந்து கொண்டு தேசியக்கொடியை ஏற்றி வைத்து சுற்றுச் சூழல் தொடர்பான கண்காட்சி நிகழ்வையும் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் கழிவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்கள் கண் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், அதில் சிறப்பான தயாரிப்புக்களைச் செய்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.(எ)

# அடிப்படை வசதிகளின்றி சிரமப்படும் மாந்தை மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை பிரதேச கிழக்கு பாலைப்பாணி, கொம்புவைத்த குளம் பகுதி மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் கிடைக்காமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தநிலையில் அந்தப் பிரதேச மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு 17.5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பனங்காமம் சென்றோ அல்லது 16.5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள துணுக்காய் மாங்குளம், வீதியின் மூன்று முறிப்புச் சந்திக்குச் சென்றோ அதில் இருந்து போக்குவரத்தைப் பெற்று மாங்குளத்திற்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தமது கிராமங்களுக்கான மின்சார வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் எவையும் இல்லை. இரவு வேளைகளில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் எனப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# முக்கொம்பன் கிராம வீதி படுமோசம்; சேவையில் ஈடுபடும் பஸ்கள் நெருக்கடி

கிளிநொச்சி, ஜூன் 08

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் ஊடான முக்கொம்பன் கிராமத்துக்கு இடையிலான 3 கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக, அந்தப்பகுதியில் சேவையில் ஈடுபடும் இலங்கைபோக்குவரத்துச் சபை பஸ்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர் கொண்டு வருகின்றன என்று விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால், கிளிநொச்சி போக்குவரத்துசாலையில் இருந்து அக்கராயன், முக் கொம்பன் ஊடாக யாழ்ப் பாணம் வரை சேவையில் ஈடுபட்டுவரும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் போக்குவரத்துத் தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர், கிளிநொச்சி மாவட்ட செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித தீர்வும் இல்லை என்று முக்கொம்பன் பிரதேச மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். (எ)

# போரால் முள்ளந்தண்டு வடம் பாதித்த 16 பேருக்கு சக்கர நாற்காலிகள்



முல்லைத்தீவு, ஜூன் 08

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்டு படுக்கையிலுள்ள 16 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் நடமாடும் மருத்துவ சேவையில் பயன் பெறும் பயனாளிகள் 16 பேருக்கு இந்தச் சக்கர நாற் காலிகள் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் மருத்துவ சேவையில் 175 இற்கு மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதே போன்ற நடமாடும் மருத்துவ சேவைகள் வடக்கு சுகாதார அமைச்சால் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோட்டிவேசன் லங்கா நிறுவனம் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஆகியவற்றின் நிதிப்பங்களிப் புடன் கொள்வனவு செய்யப் பட்ட சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாங்குளம் உயிரிழை நிறுவனத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மோட்டிவேசன் லங்கா நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் முகுந்தன், நடமாடும் மருத்துவ சேவை பணியாளர்கள் தர்சன், கஜானா, சோபிகா மற்றும் உயிரிழை நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெயகாந்தன் உட்படப் பயனாளிகளும் கலந்துகொண்டனர். (எ)

# பண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடம் திறந்து வைப்பு!



ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இலங்கைக்கான ஜப்பானிய தூதர் கெனிச்சி சுகனுமா வைபவரீதியாக திறந்து வைத்தார்,

ஐ.நா. வதிவிட நிறுவனத்தின் அமுல் படுத்தலின் கீழ், 'மன்னார் மாவட்டத்தில் கற்றல் சூழ்நிலையை மேம்படுத்தும் சமூக இயக்கத்தின் ஊடாக நிலைத்து நிற்கக்கூடிய மீள் குடியமர்தல்' எனும் திட்டத்தினூடாக அமைக்கப்பட்ட இந்தப் பாடசாலைக் கட்டடம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஜப்பானியத் தூதர் கெனிச்சி சுகனுமா, தூதரின் பாரியார் அகிகோ சுகனுமா, ஜப்பானிய தூதரகத்தின் செயலாளர் சுகுரு இரியமா, ஐ.நா. வதிவிடத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜனக தல்பஹேவா, மடுவலயக்கல்விப் பணிப் பாளர் எல்.மாலினி வெனிற்ரொன், மடு பிரதேசச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாகத் திறந்துவைத்தனர்.

பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்ப பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் 5 வரை சுமார் 126 மாணவர்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி கடந்த காலங்களில் ஓலையால் வேயப்பட்ட வகுப்பறையில் கல்வி கற்று வந்தனர்.

# சங்கக் கடை அரிசி மூடைகளை கடத்த முயன்ற ஈழ அகதிகள் நால்வர் தமிழகத்தில் கைது!

ப.நோ.கூ. சங்க அரிசியை கடத்த முயன்ற இந்தியாவின் பவானிசாகர் இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த நால்வரை பொலிஸார் நேற்று முன் தினம் கைதுசெய்துள்ளனர்.

பவானிசாகரில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் சங்கக்கடை அரிசி கடத்தப் படுவதாக பவானி சாகர் பொலிஸாருக்குத் தகவல்கிடைத்துள்ளது. அதையடுத்து, பொலிஸ் ஆய்வாளர் கலையரசி தலைமையில் பொலிஸார் இலங்கை அகதிகள் முகாமில் சோதனை நடத்தினர்.

அப்போது, கடத்தத் தயாராக வைத்திருந்த ஒரு தொன் சங்கக்கடை அரிசி மூடைகளைப் பொலிஸார் கண்டு பிடித்து பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக, முகாமைச் சேர்ந்த பெருமாள் மகன் மகேந்திரன் (வயது 45), கிருஷ்ணன் மனைவி ராணி (வயது 55), பிரபாகரன் மனைவி கிருஷ்ணலீலா (வயது 35), கரூர் அகதி முகாமைச் சேர்ந்த சுஜீந்தராஜ் மகன் பிரசாந்த் (வயது 35) ஆகிய நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர், இவர்கள் ஈரோடு உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், அரிசி மூடைகளைக் கடத்தப் பயன்படுத்த பட்டா வானும் பறிமுதல் செய்யப்பட்டது. (எ)

## எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எம்மால் ஆபத்து ஏதுமில்லை!

### பன்னீர்செல்வம் தெரிவிப்பு

சென்னை,ஜூன் 08

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசுக்கு எமது அணியால் எவ்வித ஆபத்தும் ஏற்படாது.

-இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையத்துக்கு வந்த பன்னீர்செல்வம் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது தினகரன் தலைமையில் ஒரு அணி உருவாகிறது, நீங்கள் தனி அணியாக இருக்கிறீர்கள். இதனால் ஆட்சிக்கு பாதிப்பு ஏற்படுமா ? என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அ.தி.மு.க. 3 அணிகளாகப் பிரிந்துள்ளது எனத் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளமை புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ச)

## மாட்டிறைச்சித் தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

மாட்டிறைச்சிக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து நேற்றுப் புதன்கிழமை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஐதராபாத்தை சேர்ந்த அமைப்பு ஒன்று உச்சநீதிமன்றத்தில்மேற்படி வழக்கைத் தாக்கல் செய்தது. மாடுகளை இறைச்சிக்காக கால்நடை சந்தைகளில் விற்கவோ, வாங்கவோ கூடாது என மத்திய அரசு தடை விதித்துள்ள நிலையில், இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது அந்த வகையில், எதிர்கட்சிகள்மற்றும்பல்வேறு அமைப்புகளும் மத்திய அரசின் உத்தரவைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தமிழிசைக்கு மீண்டும் கொலை மிரட்டல்!

தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு கடந்த வாரம் தொலைபேசிமூலம்கொலை மிரட்டல் வந்தது. இந்நிலையில்தற்போதுகடிதம் மூலம் மீண்டும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதுஎனத்தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடிதத்தில் மாட்டிறைச்சி விவகாரம் தொடர்பில் பேசவேண்டாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# அ.தி.மு.க. இணைப்பு: புதிய சமரசத் திட்டம்!



இரு அணிகளும் இரகசியப் பேச்சு; ஒரு வருடத்துக்கு எடப்பாடி முதல்வர்

சென்னை, ஜூன் 08

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்காக இது வரை 6 சுற்றுப் பேச்சுகள் முடிவுற்ற நிலையில் , ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருக்கு இடையே புதிய சமரசத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவால் கட்சியும், ஆட்சியும் அடுத்தடுத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஓர் அணியும், எடப்பாடி பழனிச்சாமி தலைமை யில் மற்றோர் அணியும் செயற்பட்டு வருகிறது. இதனால் அ.தி.மு.க.வின் தேர்தல் சின்னமான இரட்டை இலை முடக்கப்பட்டுகட்சிப் பெயரைப் பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டு உள்ளது. சின்னத்தை மீட்க அ.தி.மு.க.அணிகள்இணைப்பு முயற்சி மேற்கொள்ளப் பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தினகரன் இரட்டை இலைச் சின்னத்தைப் பெற லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்டு டில்லி சிறையில் அடைக்கப்பட்டார். 40 நாள்களுக்கு பின்பு விடுதலையாகி வந்த அவர், இணைப்பு முயற்சி நடக்காமையால் மீண்டும் கட்சிப் பணியில் ஈடுபடுவேன் என்று அதிரடியாக அறிவித்தார். இது அ.தி.மு.கவில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன் கட்சிப் பணியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட முடிவில் மாற்றம் இல்லை என்று ஜெயக்குமார் மீண்டும் பதிலடி கொடுத்தார். இதனால் மீண்டும் அ.தி.மு.க.வில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது ஒரு புறம் இருக்க அ.தி.மு.க. இணைப்பு முயற்சியும் ரகசியமாகமேற்கொள்ளப் பட்டு வருகிறது. இது தொடர்பாக இரு அணி நிர்வாகிகளும் ஒருவருக்கொருவர் ரகசியமாகப் பேச்சு நடத்தி வருகின்றனர் எனத் தகவல் வெளியா கியுள்ளது.

ஏற்கனவே 6 சுற்று பேச்சுகள் நடைபெற்று விட்டன எனவும், தங்கள் நிபந்தனை தொடர்பான எடப்பாடி பழனிச்சாமி அணியின் இறுதி முடிவை எதிர்பார்த்து இருப்பதாகவும் பன்னீர் அணி நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்காக எடப்பாடி பழனிச்சாமி ஒரு வருடத்துக்கு முதலமைச்சராக நீடிப்பார். ஓ.பன்னீர் செல்வம் பொதுச் செயலாளராக செயற்படுவார் என்பதே அந்த திட்டம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சசிகலா பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்படுவார். ஆனால் கட்சியில் சாதாரண உறுப்பினராக நீடிக்கலாம் என்றும் டி.டி.வி.தினகரன் துணை பொதுச்செயலாளராக இடையில் நியமிக்கப் பட்டமையால், அவரை அந்த பொறுப்பில் இருந்தும் கட்சியில் இருந்தும் நீக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டு வருகிறது. சசிகலா எடுத்த நடவடிக்கைகளையும் ரத்துச் செய்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் அ.தி.மு.கவில் இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் நேற்று சென்னையில் தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதில் கே.பி. முனுசாமி, மைத்ரேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க.வில் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழகத்தில் நிலையான ஆட்சி இருக்க வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது. எனவே தான் பன்னீர் அணியின்நிபந்தனையை ஏற்று இணைய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எடப்பாடி பழனிச்சாமி அணிக்கு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தினகரனைச் சந்திப்பதற்கு எம்.எல்.ஏக்கள் படையெடுப்பு!

சென்னை,ஜூன் 08

எடப்பாடி பழனிச்சாமிக்கு 122 சட்டசபை உறுப்பினர்கள் ஆதரவு அளித்து வருகிறார்கள். இந்த நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை டி.டி.வி. தினகரனை 27 சட்டசபை உறுப்பினர்கள் வரை சந்தித்து ஆதரவு தெரிவித்து உள்ளனர். தொடர்ந்து நேற்றும் பல சட்டசபை உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தினகரன் ஆதரவு சட்டசபை உறுப்பினர்கள் 30 ஆக உயர்ந்துள்ளன.

இதில் 11 பேர் டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாகச் செயற்படும் அதே சமயம் , எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு மறைமுகமாக மிரட்டல் விடுத்து வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 11 பேரும் திடீரென்று போர்க் கொடி உயர்த்தி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபடுவார்களோ என்ற அச்சமும் எடப்பாடி பழனிச்சாமி அணியினருக்கு ஏற்பட்டுள்ளது.

எடப்பாடி பழனிச்சாமி அணியினருக்கும், டி.டி.வி. தினகரன் அணியினருக்கும் இடையேயான மோதல் முற்றியது. இதன் போது, தினகரனுக்கு ஆதரவாக வெற்றிவேல், தங்க தமிழ்ச்செல்வன் உட்பட ஆதரவு சட்டசபை உறுப்பினர்கள் குரல் கொடுத்தனர். தினகரனை நீக்க இவர்களுக்கு அதிகாரம் இல்லாத நிலையில் அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார் ? என்று கேள்வி எழுப்பி உள்ளனர். இதனால் அ.தி.மு.க. வில் கட்சியிலும், ஆட்சியிலும் மீண்டும் நெருக்கடி உருவாகியுள்ளது. (ச)

## இஃப்தாரில் உணவு உட்கொண்ட 175 பேர் வைத்தியசாலையில் !

உத்தரப்பிரதேசத்தில் இஃப்தார் விருந்தில் உணவு உட்கொண்ட 175 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள ஒரு மத போதனை பள்ளியில் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு விருந்து உட்கொண்டனர். இந்த நிலையில், விருந்தை உட்கொண்ட பெரும்பாலானோருக்கு சிறிது நேரத்தில் கடும் வயிற்றுவலி மற்றும் வாந்தி, மயக்கம் என்பன ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்துபாதிக்கப்பட்ட 175 பேர் அருகிலுள்ள மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த விருந்தில் பயன்படுத்தப்பட்ட உணவு மாதிரி சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## காஷ்மீரில் பயங்கரவாதி சரண்!

ஜம்மு-காஷ்மீர் மாநில பொலிஸ் நிலையத்தில் பயங்கரவாதி ஒருவர் சரணடைந்துள்ளார்.

டேனிஷ் அஹமது என்ற பயங்கரவாதியே ஹண்ட்வரா பொலிஸ் நிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை சரணடைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இவர் ஜம்மு காஷ்மீரில் இடம் பெற்ற பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், சமூக வலைத்தளங்களின் மூலம் தீவிரவாதத்தை பரப்பும் செயல்களில் ஈடுபட்டேன் என டேனிஷ் அஹமது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். (ச)

## கோவையில் இருந்து லண்டனுக்கு காரில் சென்ற இந்தியப் பெண்கள்!



தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் இருந்து கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி காரில் புறப்பட்ட மூன்று பெண்கள் 72 நாள்களில் 24 நாடுகளைக் கடந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை லண்டனைச் சென்றடைந்தனர்.

கோவையை சேர்ந்த மீனாட்சி அரவிந்த் (வயது-45) பொள்ளாச்சியைச் சேர்ந்த மூகாம்பிகா ரத்தினம் (வயது-38) மும்பாயைச் சேர்ந்த பிரியா ராஜ்பால் (வயது -49) ஆகியோரே இந்தத் துணிகரப் பயணத்தில் ஈடுபட்டனர்.

இந்த மூவரையும் வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மத்திய லண்டன், வெஸ்ட்மின்ஸ்ரரில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

வரவேற்பு நிகழ்வில் லண்டனில் வாழும் இந்திய மக்கள் மற்றும் துணைத் தூதர் தினேஷ் கே பட்நாயக், அமைச்சு இணைப்பாளர் ஏ.எஸ். ராஜன் உட்பட இந்தியத் தூதரக அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இவர்கள் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி கோவை ராமகிருஷ்ணா கல்லூரி மைதானத்தில் இருந்து இந்தப் பயணத்தை ஆரம்பித்தனர்.

கோவையில் இருந்து புறப்பட்ட துணிச்சல் மிக்க பெண்களின் இப் பயணம் பல்வேறு மாநிலங்கள் வழியாக, மியன்மார், சீனா, கிர்கிஸ்தான், உஸ் பெகிஸ்தான், கஜகஸ்தான், ரஷ்யா, பெலாரஸ், போலந்து, சுலோவாக்கியா, ஹங்கேரி, பல்கேரியா, மசிடோனியா, சேர்பியா, ஒஸ்ரியா, செக் குடியரசு, சுவிற்ஸர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்ஸ் என, பல நாடுகள் வழியாகச்சென்று லண்டனில் நிறைவடைந்தது. (ச)

## பயங்கரவாதிகளுக்கான ஆதரவை கட்டார் உடனே நிறுத்த வேண்டும்!

### சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



அரபுநாடுகளுடனான உறவை மீளப் புதுப்பித்துக்கொள்ளவேண்டுமாயின், பலஸ்தீனஹமாஸ் குழு மற்றும் ஐ.எஸ். பங்கரவாதிகளுக்கான ஆதரவை உடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

-இவ்வாறு சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சர் அடெல் அல்-ஜுபைர் தெரிவித்துள்ளார்.


கட்டார் நெருக்கடி தொடர்பில் நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கட்டவாறு குறிப்பிட் டார்.

கட்டார்நாட்டுடனான தூதரக உறவு மிகுந்த வேதனையுடன் தான் துண்டிக்கப்பட்டது. ரியாத் மற்றும் அரபு நட்பு நாடுகளுடனான உறவை நிலைநிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை கட்டார் நன்கு அறிந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

கட்டாரைத்தனிமைப்படுத்தும் இந்த நடவடிக்கையால்கச்சாஎண்ணெய், உலோகங்கள் மற்றும் உணவுப் பொருள்களின் வர்த்தகம் பாதிக்கப்படுவதுடன், உலகளாவிய எரிவாயு சந்தையிலும் பாதிப்புஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கு ஒன்றுபட வேண்டும் வளைகுடா நாடுகள்!

### சவுதி மன்னருக்கு ட்ரம்ப் கோரிக்கை



வொஷிங்டன், ஜூன் 08

தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கு வளைகுடா நாடுகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

-இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சவுதி அரேபிய மன்னர் சல்மானிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

கட்டார்பயங்கரவாதத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்து வளைகுடா நாடுகளான சவுதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் (எமிரேட்ஸ்) ஆகிய நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர உறவை துண்டித்துக் கொண்டன. மேலும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தங்கியிருக்கும் கட்டார் நாட்டைச் சேர்ந்தவர்கள் 14 நாள்களுக்குள்நாடுதிரும்பவும், தூதரகஅதிகாரிகள் 48 மணி நேரத்துக்குள் வெளியேறவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில், சவுதி அரேபிய மன்னர் சல்மானைத் தொலைபேசியில்தொடர்பு கொண்டு ட்ரம்ப் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடல் தொடர்பில் வெள்ளை மாளிகைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,-

''பயங்கரவாதத்தை ஒழிக்கவும் பிராந்திய ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும்வளைகுடா நாடுகளின் ஒற் றுமை அவசியம் என் பதை அதிபர் ட்ரம்ப் சவுதி மன்னரிடம்எடுத்துரைத்தார்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அதிபர் ட்ரம்ப் தனது 'டுவிட்டர்' பக்கத்தில்கட்டாருடனான இராஜாங்கஉறவைத்துண்டிக்கிறோம் என அரபு நாடுகள் அறிவித்தமையை வரவேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதிபர் ட்ரம்பின் சமாதான முயற்சி தொடர்பில் வெள்ளை மாளிகை செய்தித்துறை செயலர் சீன் ஸ்பைஸர் கூறும் போது,- ''வளைகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணும் வகையில்சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் அமெரிக்கா ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது. அங்கு மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தினால் மட்டுமே பிராந்தியப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்பதால் ஒற்றுமையை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்து வருகிறது. பயங்கரவாதக் குழுக்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுவதை முடக்குவதற்கு அதிபர் ட்ரம்ப் வகுத்துள்ள கொள்கைகளுக்குஏற்பஇந்தப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்படுத்தி பதற்றத்தை தவிர்க்க வேண்டும் என்றேஅமெரிக்காவிரும்புகிறது.'' -என்றார். (ச)

## கட்டார் நாட்டுடன் இருக்கும் துருக்கியின் உறவு தொடரும்!

### துருக்கி அதிபர் எர்டோகன் தெரிவிப்பு



கட்டார் மீது வளைகுடா நாடுகள் விதித்துள்ள தடை நல்லதல்ல . கட்டாருடனான துருக்கியின் உறவு தொடரும்.

-இவ்வாறு துருக்கி அதிபர் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

துருக்கித் தலைநகர் அங்காரவில் கட்டார் மீதான தடை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்டாரைத் தனிமைப்படுத்துவதால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாது. எங்களது துயரமான நேரங்களில் எங்களுக்கு கட்டார் நண்பர்கள் துணையிருந்துள்ளனர். கட்டாரைப் பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி வகைப்படுத்துவது கடுமையான குற்றச்சாட்டாகும். எனவே, கட்டார் மீதான அனைத்துத் தடைகளும் விரைவில் நீக்கப்படும் எனநம்புகின்றேன். வளைகுடா கூட்டுறவுச் சபையில் உள்ள நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையை பரஸ்பர பேச்சு மூலமே தீர்த்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஈரானில் இரு தாக்குதல்கள்; 7 பேர் சாவு:பலர் படுகாயம்!





ஈரான் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி, ஈரானின் புரட்சிகரத் தலைவர் றுஹோல்லா கோமெய்னியின் ஷியாரத்திலும்(நினைவிடம்)ஆகியனவற்றில் நேற்றுப்புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்களால் 7பேர்கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள், 3 ஆயுததாரிகள் உள்நுழைய முயன்றனர். அதன்போது, அந்தத் தொகுதியின் பாதுகாப்புப் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்த அதிகாரி ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டனர்.

ஷியாரத்தில், தற்கொலைக் குண்டுதாரி ஒருவர், தன்னைத் தானே வெடிக்க வைத்தார். இதன்போது 5 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல், இன்னுமொருவர், ஆறு கைக்குண்டுகளுடன், அந்தப்பகுதியில் வைத்துக்கைதுசெய்யப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழு உரிமை கோரியுள்ளது. சிரியாவிலும் ஈராக்கிலும், அக்குழுவுக்கெதிரான போரில் முக்கிய பங்காளராக ஈரான் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 50 ஆயிரம் தேள்களுடன் 33 நாள்கள் இருந்து தாய்லாந்து 'தேள் ராணி' கின்னஸ் சாதனை!



கரப்பான் பூச்சியைக் கண்டால்கூட பெண்கள் பயப்படுவார்கள். ஆனால், 50ஆயிரம்தேள்களுடன் 33 நாள்கள் இருந்து தாய்லாந்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கின்னஸ் சாதனைபடைத்துள்ளார்.

''தேள் ராணி'' என அழைக்கப்படும் தாய்லாந்தைச் சேர்ந்த காஞ்சனா கேட்சாவ் என்ற பெண் கின்னஸ் போட்டியில் கலந்துகொண்டார். இவர் இதற்கு முன்னர் 3 நிமிடங்கள், 28 நொடிகள் கொடிய விஷம் கொண்ட தேள்களை தனது முகம், கழுத்து மற்றும்கைகளில் உலாவ விட்டுகின்னஸ்சாதனை படைத்தார்.

தற்போது இரண்டாவது முறையாக 50 ஆயிரம் தேள்களுடன் 12 மீற்றர் சதுரக் கண்ணாடி உறைக்குள் 33 நாள்கள் இருந்துகின்னஸ்சாதனை படைத்துள்ளார்.

மேலும் இவர் இந்தச் சாதனை முயற்சியின் போது தனது வாய்ப்பகுதியைத் தைரியமாகத் திறந்து வைத்துள்ளார், திறந்து வைத்துள்ள இவரது வாய்க்குள் தேள்கள் தங்களது கொடுக்குகளை நுழைத்து உலாவித்திரிந்தன.

ஆனால் இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாமல் மிகவும் தைரியமான முறையில் இந்த சாதனையை இவர்படைத்துள்ளார். (ச)


## சூதாட்டத்தில் 5 மனைவிகளை அடமானம் வைத்தார் சவுதி இளவரசர்!

சூதாட்டத்தில் தோற்ற சவுதி இளவரசர் தனது 5 மனைவிகளைப் பணத்துக்குப் பதிலாக அடமானம் வைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் இளவரசர் மஜீட் பின் அப்துல்லா அண்மையில் எகிப்து சென்றார். அவர் அங்குள்ளசினாய்கிராண்ட் சூதாட்ட விடுதியில் சூதாட்டம் ஆடித்தோற்றுள்ளார்.

அவர் பணம் கொடுக்க முடியாதநிலையில் தனது 5 மனைவிகளை அந்த விடுதியிலேயே அடமானம் வைத்துவிட்டு சவுதிக்குத்தனியேவந்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. (ச)

## நேபாளத்தின் 40 ஆவது பிரதமராக பேர் பகதூர் டியூபா தெரிவானார்!



நேபாளத்தின் 40 ஆவது பிரதமராக நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஷேர் பகதூர் டியூபா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நேபாள காங்கிரஸ் கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், பிரசண்டாபிரதமர்பதவியை ராஜினாமாச் செய்தார். இதனை அடுத்து, நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் டியூபா தெரிவாகியுள்ளார்.

593 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 388 பெரும்பான்மை வாக்குகளால் டியூபா வெற்றி பெற்றுள்ளார்.

டியூபா இதற்கு முன்பு மூன்று முறை பிரதமராகப் பதவி வகித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி பிரதமர் பதவிக்குப்போட்டியிடுவதில்லை என முடிவு செய்தது. இதனால், டியூபா மட்டுமே போட்டியில் இருந்தார். எனவே, அவர் பிரதமராகத் தெரிவுசெய்யப்படுவது உறுதியானது. எனினும், நாடாளுமன்றத்தில் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தி பெரும்பான்மை வாக்குகளை பெறவேண்டும் என்பதன் அடிப்படையிலேயே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

# இந்தியாவுக்கு எதிரான போட்டி இன்று:



# வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இலங்கை!

லண்டன், ஜூன் 08

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் முக்கியமான போட்டிகளில் ஒன்றாக இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான மோதல் இன்று வியாழன் ஓவல் அரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டி குறித்த பலரது எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ள நிலையில் பலரும் இவ்வாட்டம் குறித்து கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே, நடைபெற்ற தென்னாபிரிக்க அணியுடனான ஆரம்பப் போட்டியில் வெற்றி வாய்ப்பை தவறவிட்ட நிலையில், அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற வேண்டுமானால் பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகளுடனான போட்டிகளில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நிலையில் இலங்கை அணி உள்ளது.

அதேபோன்று, குறித்த நேரத்திற்குள் பந்து வீசத் தவறிய காரணத்திற்காக இரண்டு போட்டித் தடைகளை எதிர்கொண்டுள்ளார் தற்காலிக அணித் தலைவர் உபுல் தரங்க.

எனவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான போட்டியில் விளையாட முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அதுபோன்றே, காயமடைந்து முதல் ஆட்டத்தில் விளையாடாமல் இருந்த அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், நாளைய போட்டியில் விளையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவரது பங்களிப்பு முழுமையாக அணிக்கு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறான கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கை அணி அடுத்த போட்டிகளை எதிர்கொள்ளவுள்ளது.

இந்த நிலையில், தற்பொழுது இங்கிலாந்தில் போட்டி வர்ணனைகளை வழங்கி வரும் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட ஜாம்பவானுமாகிய குமார் சங்கக்கார தற்போதைய இலங்கை அணிக்கு சில அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

அந்த வகையில், அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் விளையாடவில்லையெனில், இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணிக்கு இந்தியாவுடன் வெற்றி வாய்ப்பு குறைவாக இருக்கும் என சங்ககார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அஞ்சலோ மத்தியூஸ் அணியில் உள்வாங்கப்பட்டாலும், ஏனைய வீரர்களது பங்களிப்பும் மிகவும் முக்கியம்.

அனுபவம் வாய்ந்த மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரரான உபுல் தரங்க இரண்டு போட்டிகளுக்கு தடை விதிக்கப்பட்டமை இலங்கை அணிக்கு பெரும் இழப்பு. அதேநேரம் மூத்த மற்றும் அனுபவம் மிக்க லசித் மலிங்க இரண்டு சுழல் பந்து வீச்சாளர்களுடன் குறித்த நேரத்தை விட மேலதிகமாக 39 நிமிடங்களை எடுத்துக் கொண்டமை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறான ஒரு நிலை இதன் பின்னர் இடம்பெறாமல், அணித் தலைவர் மாத்திரமன்றி, மூத்த பந்து வீச்சாளர்களும் இதற்கான பொறுப்பை எடுத்து நிலைமையைச் சரி செய்யவேண்டும். அது போன்றே, விக்கெட் காப்பாளர் மற்றும் களத்தடுப்பு வீரர்களும் தடங்கல் இல்லாமல் விரைவாகப் பந்து வீசுவதற்கான பங்களிப்புகளை வழங்க வேண்டும்.

கடந்த போட்டியில் வேகப்பந்து வீச்சாளர்கள் கடும் சிரத்தையுடன் பந்து வீசியதைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக நுவான் பிரதீப் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர்களை கட்டுப்படுத்தி அச்சுறுத்தும் விதத்தில் பந்து வீசியிருந்தார்.

எனினும், முதல் 10 ஓவர்களுக்குள் எந்த விதமான விக்கெட்டுகளையும் கைப்பற்றவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஏனெனில், இந்தியா போன்ற உறுதியான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ள அணிகளை எதிர்கொள்ளும்போது விக்கெட்டுகளை வீழ்த்துவது முக்கியமானது. அல்லது ஓட்டங்களை மலை போல் குவித்து விடுவார்கள்.

இந்த நிலையில், திஸார பெரேரா போன்ற சகலதுறை ஆட்டக்காரர்களை சீக்குகே பிரசன்ன போன்ற அதிரடி வீரர்களுடன் இணைத்து விடுவது அணிக்கு மேலும் பலவகையில் வலு சேர்க்கும்.

இந்த இளம் இலங்கை அணி களத்துக்குச் சென்று சுதந்திரமாக தங்களுடைய தனிப்பட்ட திறமைகளை சாதகமான முறையில் வெளிப்படுத்தி ஆக்ரோஷமாக ஆடினால் அவர்களால் இந்திய அணியை வெற்றிகொள்ள முடியும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாக உள்ளது. எனினும் அது அவ்வளவு எளிதானதல்ல.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கிண்ணத்தைக் கட்டாயம் கைப்பற்றப் போகும் அணி எனப் பலரும் இந்தியாவை எதிர்வு கூறியுள்ள நிலையில், பரம எதிரியான பாகிஸ்தான் அணியை நன்றாகவே கவனித்து அனுப்பிய உற்சாகத்துடன் அவர்கள் இலங்கை அணியை எதிர்கொள்ளவிருக்கின்றனர்.

இந்திய அணியைப் பொறுத்தவரை நடப்புச் சம்பியனாக களமிறங்கியுள்ள நிலையில், ரோஹித் சர்மா மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் ஆரம்பப் போட்டியிலேயே உறுதியான இணைப்பாட்டதை வெளிப்படுத்தியமை மற்றும் கடந்த கால போட்டிகளின்போது இந்தியா பெற்ற வெற்றிகளில் இவர்களுடைய பங்களிப்பு போன்றவற்றை கவனிக்கும் போது இலங்கை அணிக்கு பெரிய சவால் ஒன்று காத்திருக்கின்றது என்பது உறுதி.

அத்துடன் ஏனைய துடுப்பாட்ட வீரர்களையும் வழி நடத்தும் அணித் தலைவர் விராட் கோஹ்லியும் ஐ.பி.எல் இன் தொடர் சரிவுகளுக்கு பின்னர் மீண்டெழுந்துள்ளமை இலங்கைக்கு மேலும் அச்சுறுத்தும் உணர்வைக் கொடுக்கின்றது.

எவ்வாறெனினும், இந்திய அணியைத் தெரிவு செய்யும் பெரும் பங்கு கோஹ்லியிடம் உள்ளது. அத்துடன் பல் வேறுப்பட்ட தெரிவுகளுக்கு மத்தியில், எவ்வாறான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அணியின் வலிமை குறைவதற்கு வாய்ப்பே இல்லையென அடித்துக் கூறலாம்.

இந்த நிலையில், இலங்கைத் தரப்பு மாற்றுத். திட்டங்கள் மற்றும் புதிய வியூகங்களை இந்திய அணிக்கெதிராக வகுக்க வேண்டும்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக வெளிப்படுத்திய சிறந்த பந்து வீச்சு, களத் தடுப்பு மற்றும் நிரோஷன் டிக்வெல்லவின் அதிரடி துடுப்பாட்டம் போன்ற சாதகமான திறமைகளை கருத்தில் கொண்டு மன வலிமையுடன் இலங்கை அணி களமிறங்க வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# உபுல் தரங்கவுக்கு தடை விதித்தமைக்கு பயிற்சியாளரே பொறுப்பு!

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 08

உபுல் தரங்கவிற்கு விதிக்கப்பட்டுள்ள ஐ.சி.சி.யின் போட்டித் தடைக்கான முழுப்பொறுப்பையும் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தான் ஏற்க வேண்டும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உபுல் தரங்கவுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த தடைக்கான முழுப்பொறுப்பையும் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தான் ஏற்கவேண்டும்.

இந்தப் போட்டியில் பயிற்சியாளர் கிரஹம் போர்டின் வழிநடத்தல் தொடர்பில் நான் திருப்தி கொள்ளமாட்டேன். தரங்கவின் தடைக்கான பொறுப்பையும் நிச்சயம் பயிற்சியாளரே ஏற்க வேண்டும்.

அதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறுவுள்ள போட்டிகளில் தரங்கவுக்கு விளையாட முடியாததால் இலங்கை அணிக்கு அது மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது போட்டியில் இலங்கை அணிக்குத் தலைமை தாங்கிய உபுல் தரங்க அனுபவமிக்க லசித் மலிங்க மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களை அதிகம் வைத்துக்கொண்டு ஓவர் களை வீச 39 நிமிடங்கள் கூடுதலாக எடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஜோ ரூட் அபாரமான ஆட்டம்;



# அரையிறுதியில் முதல் அணியாக நுழைந்தது இங்கிலாந்து அணி!

லண்டன், ஜூன் 08

நியூஸிலாந்து அணிக்கு எதிரான சம்பியன் கிண்ணப் போட்டியில், ஜோ ரூட்டின் அபாரமான ஆட்டத்தால் இங்கிலாந்து அணி முதலாவது அணியாக அரை இறுதிக்குள் நுழைந்துள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத்திற்காக இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதிக்கொண்ட குழு 'ஏ' இற்கான போட்டியில் 87 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

கார்டிப் சோப்ஹியா மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதிக்கொண்ட சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான 6 ஆவது போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

ஆஸ்திரேலிய அணியுடனான ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில், இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் அரையிறுதிப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெறக்கூடிய சந்தர்ப்பம் இருந்ததால் இங்கிலாந்து அணி வெற்றியை பதிவு செய்யும் எதிர்பார்ப்பில் களமிறங்கியது.

அந்த வகையில் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜேசன் ரோய் மற்றும் அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 37 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்ட நிலையில் ஜேசன் ரோய், அடம் மில்னேயின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து துடுப்பாடக் களமிறங்கிய ஜோ ரூட், அலெக்ஸ் ஹேல்ஸுடன் இணைந்து நிதானமாகத் துடுப்பாடி இரண்டாம் விக்கெட்டுக்காக 81 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக்கொண்ட நிலையில், மீண்டும் அடம் மில்னேயின் அதிரடிப் பந்து வீச்சில் அலெக்ஸ் ஹேல்ஸ் 56 ஓட்டங்களுடன் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன் வெறும் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார். அவரைத் தொடர்ந்து களம் வந்த சகலதுறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸ், ஜோரூட்டுடன் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி மீண்டும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

இந்த நிலையில், அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 188 ஆக இருந்த போது ஜோ ரூட் 64 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து பென் ஸ்டோக்ஸ் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார்.

அதிரடியாகத் துடுப்பாடிய ஜொஸ் பட்லர் ஆட்டமிழக்காமல் 48 பந்துகளை எதிர்கொண்டு 2 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 61 ஓட்டங்களைப் பதிவு செய்த அதேவேளை இங்கிலாந்து அணி 300 ஓட்டங்களுக்கு மேல் குவிக்க பங்களிப்புச் செய்தார். எனினும், நியூஸிலாந்து அணி சீரான இடை வெளிகளில் விக்கெட்டுகளை வீழ்த்தியதால் இங்கிலாந்து அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் அடம் மில்னே மற்றும் கோரி அண்டர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் டிம் சௌத்தி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

கடினமான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பமே கசப்பாக இருந்தது. ஜாக் போலினால் வீசப்பட்ட முதல் பந்திலேயே லூக் ரொன்கி நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். எனினும் அவரைத் தொடர்ந்து களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸுடன், மார்டின் கப்டில் இணைந்து இரண்டாம் விக்கெட்டுக்காக 62 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுவான நிலைக்கு உயர்த்தினார்.

பென் ஸ்டோக்ஸுன் பந்து வீச்சில் மார்டின் கப்டில் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல, அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ரொஸ் டெய்லர் மூன்றாம் விக்கெட்டுக்காக அணித் தலைவர் வில்லியம்ஸுடன் இணைந்து 95 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றார்.

எனினும், இவ்விருவர்களின் ஆட்டமிழப்பின் பின்னர் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றமையினால் நியூஸிலாந்து அணி 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்று 87 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் மாற்றங்கள் செய்கிறது ஐ.சி.சி!

டுபாய், ஜூன் 08

ஒருநாள் கிரிக்கெட் போட்டி விதிமுறைகளில் மூன்று முக்கிய மாற்றங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

**வீரர்கள் உபயோகப் படுத்தும் பேட்**

பந்தின் தன்மைக்கு ஏற்ற பேட் மட்டுமே இனி வீரர்கள் உபயோகப்படுத்த வேண்டும். அதன்படி பேட்டின் தடிப்பின் அளவு 67 மில்லி மீற்றர் இருக்க வேண்டும் எனவும், பேட்டின் எட்ஜில் 40 மில்லி மீற்றர் வரை இருக்கலாம் எனவும் புதிய வரைவு வகுக்கப்பட்டுள்ளது.

**ரெட் கார்ட் முறை**

ஒரு தனிப்பட்ட வீரரின் நடவடிக்கையை கண்காணித்து அதில் விதிமுறை மீறல் இருந்தால், அவரை ஆட்டத்தில் இருந்து வெளியேற்றும் உரிமை நடுவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது உதைபந்து விளையாட்டில் இருக்கும் ரெட் கார்ட் விதிமுறை போன்றதாகும்.

**ஓட்டங்கள் எடுக்க முயலும் போது அவுட்டானால்**

துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் எடுக்க முயலும் போது கிரீஸை தொட்டுவிட பலசமயம் தாவி விழுவார்கள். தாவும்போது பேட் தரையில் பட்டு பவுன்ஸ் ஆக நேரும்.

பேட் கிரீஸ் கோட்டுக்கு உள்ளே வந்த நிலையிலும் தரையில் படாமல் இருந்தால் அவர் அவுட் என்றே கருதப்படுவார்.

தற்போது ஐ.சி.சி. இதில் செய்துள்ள மாற்றத்தின் படி, பேட்ஸ்மேன் கிரீஸுக்குள் தனது பேட்டை கொண்டு வந்தாலே அது ஓட்டம் எடுத்த கணக்கில் சேரும் எனக் கூறப்பட்டுள்ளது.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டி: வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி

பாரிஸ், ஜூன் 08

பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு கால்இறுதி ஆட்டத்தில் முன்னாள் முதல் தர வீராங்கனை வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி கண்டுள்ளார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் கரோலின் வோஸ்னியாக்கி 6:4, 2:5 என்ற கணக்கில் இருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

பலத்த மழை கொட்டியதால் சில மணி நேர பாதிப்புக்குப் பின்னர் ஆட்டம் தொடர்ந்தது.

முதல் செட்டை இழந்த ஜெலீனா ஒஸ்டாபென்கோ பின்னர் அபாரமாக செயற்பட்டு வெற்றியைத் தனதாக்கினார்.

முடிவில் ஜெலீனா ஒஸ்டாபென்கோ 4:6, 6:2, 6:2 என்ற கணக்கில் வோஸ்னியாக்கிக்கு அதிர்ச்சி அளித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

# தொழில்சார் கிரிக்கெட்டின் அதிசிறந்த வீரர் சங்கா!



கொழும்பு, ஜூன் 08

தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் அதிசிறந்த வீரருக்கான விருதை குமார் சங்கக்கார வென்றெடுத்துள்ளார்.

சரே பிராந்திய கிரிக்கெட் அணி வீரர் குமார் சங்கக்கார மே மாதத்திற்கான அதிசிறந்த கிரிக்கெட் வீரருக்கான தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் விருதையே வென்றெடுத்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரரான குமார் சங்கக்கார தொழில்சார் கிரிக்கெட் சங்கத்தின் மிகவும் பெறுமதிமிக்க வீரருக்கான தரவரிசையில் 167 புள்ளிகளைப் பெற்று அதிசிறந்த வீரரானார்.

இவருடன் இந்த விருதுக்காக குறும்பட்டியலில் இசெக்ஸ் வீரர் அலஸ்டெயார் குக், ஹேம்ப்ஷயர் வீரர் டெரில் மிச்செல், கிளமோர்கன் வீரர் கொலின் இங்ராம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் இந்தக் கோரிக்கையை முன்வைத்த னர்.

**விசாரணைக்குழு நியமனமும் அறிக்கை சமர்ப்பிப்பும்**

அதனையடுத்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்மூவர்அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நிய மித்தார். அக்குழுவினர் நடத் திய விசாரணைகளின் முடி வில், வடக்கு விவசாய அமைச் சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகி யோரைக் குற்றம் இழைத்தவர் கள் என இனங்கண்டனர். அவர் கள் பதவி விலகவேண்டும் என வும் பரிந்துரை செய்தனர்.

**விசேட அமர்வு**

இந்நிலையில், அந்த அறிக்கை தொடர்பாக ஆராய் வதற்காக நேற்று வடக்கு மாகாண சபை விசேட அமர்வா கக் கூடியது. இந்த அமர்வில் முதலமைச்சர் ஆரம்ப உரை யாற்றிய பின்னர், அமைச்சர் களுக்கு எதிரான விசாரணை அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கை அந்தரங்க மானது என தனது உரையில் குறிப்பிட்ட முதலமைச்சர், அதை ஊடகங்களுக்கு வழங்கவேண் டாம் என உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

மேலும், இந்த விசாரணை அறிக்கை தொடர்பாக உறுப் பினர்களின் கருத்தறியும் அமர்வை நாளை 9 ஆம் திகதி நடத்துமாறும் அவர் கூறினார்.

அமைச்சர்கள் மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட செய்தி கள் ஊடகங்களில் வெளிவந்த மையால், அந்த அமைச்சு அதி காரிகள், அலுவலர்கள் மத்தி யில் குழப்பமான நிலை நீடிப் பதால் மிக விரைவாக அதற்கு முடிவு காணவேண்டும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

**ஊடகங்களுக்குத் தடை**

இதன்போது உறுப்பினர்கள் சிலர் கருத்து தெரிவித்தனர். உறுப்பினர்களின் கருத்தறியும் அமர்வின்போது ஊடகவியலா ளர்களுக்கு அனுமதி மறுப்பது நல்லது என முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித் தார்.

அண்மைக் காலமாக சில ஊடகங்கள் வடக்கு மாகாண சபை தொடர்பான செய்தி களைத் திரிபுபடுத்தி வெளியிடு கின்றன எனவும் அவர் கூறி னார்.

முதலமைச்சரின் அந்தக் கருத்துக்கு ஆளும் கட்சி உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவ ராசா ஆகியோர் எதிர்ப்பு வெளி யிட்டனர்.

இதன்போது கருத்துக்கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதி லக, விசாரணை அறிக்கையின் தகவல்கள் உறுப்பினர்களான எங்களுக்கு கிடைக்கும் முதலே ஊடகங்களுக்கு கிடைத்துவிட் டன. எனவே ஊடகவியாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் ஊடகங்கள் தொடர்பாக விசனம் வெளியிட் டார். அமைச்சர்கள் மீதான குற்றசாட்டுக்களை வைத்துக் கொண்டு அவர்களைக் குற்ற வாளிகள் எனும் விதமாக ஊட கங்கள் செய்திகள் வெளியிட்டு உள்ளன என அவர் கூறினார்.

இந்த நிலையிலேயே, எதிர் வரும் 14 ஆம் திகதி நடைபெற வுள்ள அமர்வுக்கு இலத்திரனி யல் ஊடகங்கள் நேரடி ஒளி பரப்புச் செய்வதற்குத் தடை விதிக்கப்படுகின்றது என அவர் அறிவித்தார்.

**ஆளும் கட்சியே குற்றஞ்சாட்டியது**

எதிர்க்கட்சி உறுப்பினர் வை. தவநாதன் அங்கு கருத்துரைக் கையில், மத்தியில் ஆட்சி மாறிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காட்சிகள் மாறி விட்டன என்றார். எதிர்க்கட்சி உறுப்பினர்களான தாங்கள் அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை முன்வைத்து விசாரணை நடத்துங்கள் என பல தடவைகள் கோரினோம். ஆனால், நடவடிக்கை எடுக்க வில்லை.

அதன் பின்னர் ஆளும் கட் சியினரே அமைச்சர்கள் மீது குற்றச் சாட்டுக்களை முன் வைத்து விசாரணைகளை மேற் கொள்ள வேண்டும் எனக் கோரி னார்கள். - என்றார்.

**மூடி மறைக்கக்கூடாது**

அறிக்கை தொடர்பில் வெளிப் படைத்தன்மை வேண்டும். விசேட அமர்வு நடத்தி உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளிப் படையாகக் கூறச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அதனை விடுத்து, அறிக்கை தொடர்பில் மூடிய அறைக்குள் முடிவெடுக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித் தார்.

அப்போது ஆளும்கட்சி உறுப் பினர் ஜி.ரி.லிங்கநாதன், எதிர்க் கட்சித் தலைவரின் கருத்துக் கள் ஆடு நனையுது என ஓநாய் கவலைப்பட்டது போல உள்ளது. ஊடக சுதந்திரம் தொடர்பிலும் ஜனநாயகம் தொடர்பிலும் அவர் பேசுகின்றார்.

தற்போது எதிர்க்கட்சியாக உள்ள அவர்கள், ஆளும் கட்சி யாக இருந்து இருந்தால் ஊடக சுதந்திரம் ஜனநாயகம் எந்த நிலையில் இருந்திருக்கும்? என எண்ணிப் பார்க்கிறேன். - என் றார்.

**13 ஆம் திகதி ராசி சரியில்லை என்றார் சயந்தன்**

இதேவேளை, விசாரணை அறிக்கை தொடர்பாக உறுப்பி னர்களின் கருத்து அறியும் விசேட அமர்வை, எப்போது நடத்துவது என்பது தொடர்பாக உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

12ஆம்திகதி அனைவருக்கும் சாத்தியமா என அவைத் தலை வர் கேட்டபோது, அன்றைய தினம் வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன் தெரிவித்தார்.

அப்படியானால் மறுநாள் 13 ஆம் திகதி நடத்தலாமா என அவைத் தலைவர் கேட்டபோது அந்தத் திகதி இராசி சரியில்லை என்றார் ஆளும் கட்சி உறுப் பினர் கே.சயந்தன்.

14ஆம் திகதி அனைவருக்கும் சாத்தியமான திகதி என்பதால் அன்றைய தினமே விசேட அமர்வை நடத்துவது என முடி வெடுக்கப்பட்டது. (ம)

## மீதொட்டமுல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தின் உத்தரவுக்கு அமை வாக இக் குழுவினர் இந்த விசாரணை அறிக்கையை தயாரித்துள்ளனர். இந்த அறிக்கை 42 பக்கங்களைக் கொண்டதாகும்.

துணை விரிவுரையாளர் உபுல்திஸாநாயக்க இந்த அறிக் கையை நேற்று பொலிஸாரிடம் சமர்ப்பித்தார். பொலிஸ் சுற்றா டல் பாதுகாப்புப் பிரிவு இந்த அறிக்கையை எதிர்வரும் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப் பிக்கவுள்ளது. (இ)

## அரசமைப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய இராச்சியத்தின் 17 நாடுகளின் பிரதிநிதிகள், முதலமைச்சரைச் சந்தித்தனர்.

வடக்கு மகாண முதலமைச் சரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

17 நாடுகளின் பிரதி நிதிகளும் இலங்கையின் தற்போதைய நிலை எவ்வாறு அமைந்துள் ளது என்பது பற்றியும், தமது ஈடுபாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பி லும் ஆராய்வதற்காகவே இங்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கையில் தற்போதைய அரசியல் நிலை எவ்வாறு என் பது குறித்தும் எதிர்வரும் காலங் களில் எவ்வாறு அமைய வேண் டும் என்பது தொடர்பில் அதில் அவர்களது ஈடுபாடுகள் எவ் வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும் இதன்போது, அவர் களிடம் முதலமைச்சர் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு தேவை யான உரித்துக்கள் தரப்படாத நிலையிலும், அரசமைப்புதிருத் தத்தில் எந்தவிதமான முன் னேற்றமும் இல்லாத நிலை யில், பழைய அரசியல் முறை யிலேயே இன்னமும் செயற்பட வேண்டி உள்ளது எனவும் அதற் கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என வும் இதன்போது கேட்டுக் கொண்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் விரிவாகத் தாங்கள் பேச்சு நடத்துவோம் என்று ஐக்கிய இராச்சியத்தின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ள னர் என்றும் முதலமைச்சர் கூறி னார். (இ-ச)

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சமுத்திர வியல் மாநாட்டில் உரையாற் றிய போதே பிரதமர் ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, ஐக்கியநாடுகளின் பூகோள நிலையான அபி விருத்தி இலக்குகளை அடை வதற்கும், இலங்கை பூரண ஒத் துழைப்பை வழங்கும் என் றும் –

இதேபோன்றேநிலைபேறான அபிவிருத்தி இலக்கை வெற்றி கொள்வதற்காக மேம்படுத்தப் படும் அனைத்து நடவடிக்கை களுக்கும் இலங்கையின் ஒத்து ழைப்பு உண்டு என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப் பால் முன்வைக்கப்பட்ட இந்தத் திட்டத்தை இலங்கை வரவேற் றுள்ளது. (இ)

## விரிவுரைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறியுள்ளார். அது தொடர் பாக அமைச்சர் லக்ஷ்மன் கிரி யெல்ல மேலும் தெரிவிக் கையில் –

மாலபே சைட்டம் நிறுவ னத்தை அங்கீகரிப்பது சம்பந்த மாக தெளிவுப்படுத்த வர்த்த மானி அறிவித்தலை தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்திருந்தார். கடந்த 2013-09-26 திகதி இலக்கம் 1829/36 என்ற அதி விசேட வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட விடயங்கள் அதில் அப்படியே இருந்தன.

பட்டமளிக்கும் நிறுவனமாக 'சவுத் ஏஷியன் இன்ஸ்டியூட் ஒப் டெக்னோலஜி என்ட் மெடிசின்' (பிரைவேட்) லிமிட் நிறுவ னத்தை அங்கீகரிக்குமாறும் தினேஷ் குணவர்தன கோரியி ருந்தார். – என்றார். (ம)

## தமிழருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்துள்ளது.

நியூயோர்க்கிற்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை சந்திக்கவுள்ள தன் பின்னணியில் அந்த அமைப்பு இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது.

'ட்ரம்பிற்கான தமிழர்கள்' புலம் பெயர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது :-

சமஷ்டி அடிப்படையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத் துக்கு வழங்கியுள்ளது. அவற்றை நிறைவேற்ற இலங்கை அரசாங் கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கும் டொனால்ட் ட்ரம்பின் அதிகாரி கள் இந்த விடயங்களில் அழுத் தத்தை பிரயோகிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ச)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சா ளருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

புதுடில்லியில் அமைக்கப்பட் டுள்ள பௌத்த விகாரையை மஹாபோதி நிறுவனம் நிர்வ கித்து வருகிறது. அவ்விகாரை யில் குறிப்பிட்டளவு இடவசதியும் காணப்படுகின்றது. வெளிநாடு களில் இருந்து வருகின்ற பக்தர் கள் தரிசிப்பதற்கு ஒரு தூபியும் அங்கு இல்லை. மேலும் அவர் களுக்கான முறையான வசதி களும் அங்கு குறைவாகவே காணப்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு புதுடில்லியில் பௌத்த தூபி ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிலமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இந் திய அரசின் உரிய அதிகாரிகளு டன் கலந்துரையாடப்படவுள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்ட லுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியுள்ள தாக அமைச்சரும் அமைச்ச ரவைத் துணைப்பேச்சாளரு மான கயந்த கருணாதிலக தெரி வித்தார். (இ)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியிருந்தால், அனர்த்தம் ஏற்பட்ட போது பிரதேச மட்டத் தில் மேலும் இணைந்து செயற் பட்டிருக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

சீரற்ற காலநிலையால் ஏற் பட்ட அனர்த்த நிலைமையில், அரச பொறிமுறை மிகவும் பலவீ னமான நிலையில் செயற்பட்டது.

மக்களைக் காப்பாற்ற பிக்குமா ரும் பிரதேச மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் பெரும் பங்களிப்பைச் செய்தனர்.

அமைச்சர்கள் குறித்து நாட்டு மக்களுக்கு எவ்வித நம்பிக்கை யும் இல்லை. அதனால், அவர் கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற முடியவில்லை.

இதன் காரணமாக வேறு பிர தேசங்களைச் சேர்ந்த அமைச் சர்கள் அனர்த்தம் ஏற்பட்ட பகுதி களுக்கான நிவாரணப் பணி களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் மஹிந்த யாப்பா அபே வர்தன குற்றம் சுமத்தியுள்ளார். (இ-ச)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணி சுற்றாடலுக்கு நன்மை புரிந்து உலகை மிகச் சிறப்பான தாக மாற்றுவோமென திடசங் கற்பம் பூணுவோம்.

அனைவருக்கும் புண்ணி யம்மிக்க பொசன் வாழ்த்துக் கள். – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பொசன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தி யில் –

இரண்டாம் தேவநம்பிய தீஸ்ஸ மன்னன் மிகிந்தலை யில் அன்று வேட்டையாடலைக் கைவிட்ட இடத்திலிருந்தே இந் நாட்டின்புதிய நாகரிகம் ஆரம்ப மானது. அங்கு போதனையைப் பெற்ற மன்னனுடன், நமது நாடும் பஞ்சசீலத்துக்கு அமை வாக, தயை மற்றும் கருணையை முன்னிறுத்திய பயணத்தை ஆரம்பித்தது.

அன்று நாம் புதியதொரு சம யத்தின் உரிமையை மட்டு மன்றி, அக்காலத்திலிருந்த பாரத மௌரிய அரசுகளின் நாகரிகம், கல்வி, இலக்கியம், சட்டக்கலை, கைத்தொழில் மற் றும் விழுமியம் நிறைந்த வாழ் வியல் ஆகியவற்றை அடையப் பெற்றோம்.

அந்த வகையில் எமது எதிர் காலத்தை உருவாக்கிய வரலாற் றுத் திருப்புமுனையாகவே பொசன் பௌர்ணமி மற்றும் மகிந்ததேரர் நமது நாட்டுக்கு வருகை தந்ததைக் கருத வேண் டும். அதனாலேயே மிகிந்தலை புண்ணிய பூமி எமது தேசத்தின் தாய் மடியாக வணங்கப்படு கிறது.

அவ்வாறு தோற்றம் பெற்ற எமது நாகரிகத்தை நோக்கிய பயணம் விலங்குகளின் உயி ரைக் கூட மதித்த இன்னா செய் யாமை கொள்கையுடன் பிணைந் துள்ளது. அதனாலேயே உல கின் முதலாவது விலங்குகள் சரணாலயம் பிரகடனப்படுத்தப் பட்டது. அத்துடன் சுற்றாடலுடன் மிக நெருக்கமான பிணைப் புடன் வாழ்வதற்கு பௌத்தம் நல்கும் வழிகாட்டல், எமது நல் லிருப்புக்குரு தன்மைக் காரணி யாக அமைந்துள்ளது.

பௌத்த தர்மம் போதித்த சூழ லுடனான பிணைப்பு முறிவடை யும்போதே நாம் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. சுற் றாடலுக்கும் மனிதனுக்கும் இடையிலான பரஸ்பர உறவு முறிவடையும் போது ஏற்படும் இடர்களை, எல்லையற்ற தொழில்நுட்பங்களால் இயற் கைக்கெதிராக மனிதர் செய் யும் தீங்குகளின் எதிர்விளை வுகளே மனிதர்களுக்கெதிரான தீய விளைவுகளாக உருமாறும் என தீகநிகாய அக்கஞ்ஞ சூத்தி ரம் எனும் பௌத்த போதனை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. – என்றுள்ளது. (இ)

# சர்வதேச நாடுகளின் பேச்சை கேட்காததால் தண்டிக்க முயற்சி

## சாடுகிறார் கம்மன்பில எம்.பி.



சர்வதேச நாடுகளின் பேச்சைக் கேட்காமல், விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தமையால், அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாத சர்வதேச நாடுகள், இலங்கையைத் தண்டிக்க முயல்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிரணியால், நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட ஜெனீவாத் தீர்மானம் தொடர்பானசபை ஒத்திவைப்பு விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் அமைப்புடன், போர் ஆரம்பித்த போது மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டன. அவர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் தகவல்களை வழங்கின. அதனால், இந்தோனேஷிய கடற்பரப்பில், ஆயுதங்களுடன் இருந்த புலிகளின் ஆயுதக் கப்பல்கள்மூன்றை இலங்கைப் படையினரால் அழிக்க முடிந்தது.

இந்தநிலையில், மேற்கத்தேய அதிகாரமிக்க நாடுகள், ஈராக் போன்ற நாடுகளுடன் போர் புரிந்த நிலையில் அவர்களால் அதில் வெற்றிபெற முடியாதநிலை காணப்பட்டது.

அந்த நேரத்தில், விடுதலைப் புலிகளை அழித்து இலங்கை வெற்றிபெறுவதை அந்தநாடுகள்விரும்பவில்லை. விடுதலைப் புலிகளை நாங்கள் கட்டுப்படுத்துவோம் என்று நினைத்தே, எங்களுக்கு ஆதரவளித்த மேற்கத்தேய நாடுகள், 2009ஆம் ஆண்டு கிளிநொச்சியை இலங்கைப் படையினர் வெற்றிகொண்டதும். விடுதலைப் புலிகளை நாங்கள் அழிக்கப் போவதைப் புரிந்துகொண்டன.

இதில் விரும்பமில்லாத நிலையில், அன்றைய நாள்களின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, அன்றைய அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஹிலாரி கிளின்டன் உள்ளிட்ட முக்கியமான உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வந்தன.


எனினும், நாங்கள் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதால், மேற்கத்தேய நாடுகள் வெட்கமடைந்தன.

தமது பேச்சை மீறி செயற்பட்ட இலங்கையைத் தண்டிக்காவிட்டால் சர்வதேச நாடுகளிடம் தமது அதிகாரத்தை நிரூபிக்க முடியாது என்பதால், இலங்கை மீதான குற்றப்பிரேரணையை அந்த நாடுகள் கொண்டு வந்தன.

அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜெனீவாத் தீர்மானத்தின்படி, விசாரணைகளுக்காக எமது பொலிஸாருக்குப் பதிலாக சர்வதேச பொலிஸார், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுக்குப் பதிலாக சர்வதேச நீதிபதிகள் மற்றும் எமது சட்டத்தரணிகளுக்கு பதிலாக வெளிநாட்டுச் சட்டத்தரணிகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.- என்றார்.

# இலங்கை மக்களின் மனிதாபிமானத்தின் பின்னணியில் பௌத்த மதக் கோட்பாடு

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்



உலகில் எந்தவொரு நாட்டிலும் காணமுடியாத தியாகமும், மனிதாபிமானமும் இலங்கை மக்களிடையே காணப்படுவதற்கு பௌத்த கோட்பாட்டு பின்னணியிலான சமூகச் சூழலே காரணம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் பெந்தர விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தபிரானின் திருவுருவச்சிலையை திறந்து வைத்தல் மற்றும் வண. பெந்தர ஜினாநந்த தேரருக்கு சங்க நாயக்கர் பதவியை வழங்கும் நிகழ்வு ஆகியவற்றில் கலந்து கொண்டு உரையாற்றும் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது அன்பு, கருணை மற்றும் தியாக சிந்தையுடன் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பக் கண்ணீருடன் இணைந்து அவர்களை ஆற்றுப்படுத்துவதற்காக அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டனர்.

பௌத்த தத்துவத்தின் அடிப்படையிலான உன்னத மனிதாபிமான பண்புகள் இலங்கை மக்களின் இதயங்களில் நிறைந்துள்ளமையே காரணமாகும்.-என்றார்.

வண.பெந்தர ஜினாநந்த தேரரின் சமய, சமூக சேவைகளைப் பாராட்டி காலி கோரளையின் பிரதம சங்க நாயக்கர் பதவி வழங்கப்பட்டது. தேரருக்கான நினைவுப் பரிசு ஒன்றும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.(எ)

# நீர்கொழும்பு வாய்க்காலில் சேகரிக்கப்படும் தங்கம்!

கொழும்பு, ஜூன் 08

நீர்கொழும்பு வாய்க்கால்களில் தங்கத் துகள்கள் சில பொதுமக்களால் மீட்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு தங்கங்களுக்கு பிரபல்யமான நகரம் அல்ல. எனினும், அந்தப் பகுதியில் தங்க நகைகள் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் கடைகள் அதிகமாக உள்ளன.

நகை செய்யும் இடங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள், நீர் செல்லும் வாய்க்கால்களுக்குள் அடித்துச் செல்லப்படுகின்றன. இந்த நிலையில் அங்கு சிறிய அளவிலான தங்க நகைகளின் துகள்களும் அடித்துச் செல்லப்படுகின்றன.

இவ்வாறு குப்பைகள் நிறைந்த வாய்க்கால்களுக்குள் கண்டுபிடிக்கப்படுகின்ற தங்கத்தைச் சேகரித்து விற்பனை செய்யும் குழு ஒன்று நீர் கொழும்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய கடந்த 27 ஆம் திகதி நீர்கொழும்பில் உள்ள பழைய பஸ் நிலையத்தில், அந்தப் பகுதியை சேர்ந்த குமார் என்ற நபருக்கு தங்கம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(எ)

# காட்டு யானைகள் குப்பைகளை உண்பதைத் தடுக்க விசேட திட்டம்

## நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானம்

காட்டு யானைகள் குப்பைகளை உண்ணுவதை தடுப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

யானைகள் பெரும் எண்ணிக்கையாக வசிக்கும் காட்டுப் பிரதேசங்களுக்கு அருகில் பெரியளவில் குப்பைகள் கொட்டப்படும் 54 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள அமைச்சர், 300 இற்கும் மேற்பட்ட யானைகள் இந்தக் குப்பைகளை உணவாக எடுத்து கொள்கின்றன என்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குப்பைகளை உண்ணுவதன் காரணமாக யானைகளின் சுகாதாரத்துக்கு மட்டுமல்ல அதன் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குப்பைகள் கொட்டப்படும் பிரதேசங்களுக்கு யானைகள் செல்ல முடியாத வகையில் மின்சார வேலிகளை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மின்சார வேலிகளை அமைக்கும் பணிகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பில் அமைச்சின் அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருகின்றோம். -என்றார். (எ)

# அனர்த்தக் காப்புறுதி தொகையை வழங்க உடன் நடவடிக்கை

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக சேதமடைந்துள்ள வீடுகளுக்கான காப்புறுதித் தொகை பெற்றுக் கொடுத்தலை உடனடியாக மேற்கொள்ளவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இது தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அதேபோல், அனர்த்தங்களை குறைத்துக்கொள்வதற்கான வனிமண்டலதிணைக்களம் தயாரித்த அறிக்கையின் விடயங்கள் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார். (எ)



புனித ரமழான் காலத்தை முன்னிட்டு கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட 84 பள்ளிவாசல்களுக்கு சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தலைமையில் நிதியுதவி வழங்கப்பட்டது.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களின் இமாம்களுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. (எ)

# நந்திக்கடலில் நேற்று உயிருடன் சிக்கின 2 ஆயிரம் கிலோ மீன்கள்!





முல்லைத்தீவில் நேற்று வெப்பநிலை குறைவாக இருந்தது. இக்காலநிலையை சாதகமாக்கிய மீனவர்கள் நந்திக்கடலில் மீன்பிடித் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவில் கடும் வறட்சியான காலநிலை காரணமாக கடந்த சில நாள்களாக நந்திக்கடல் வட்டுவாகல் பகுதிகளில் லட்சக்கணக்கில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி இருந்தன.

இந்த மீன்களை அங்கிருந்து அகற்றிய அப்பகுதி மீனவர்கள் எஞ்சியுள்ள மீன்களை வலை விரித்து நேற்றுப் பிடித்தனர்.


இது தொடர்பாக மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

மீன்களின் இறப்புக்குக் காரணம் காலநிலை மாற்றமே தவிர மீன்களுக்கு நோய் ஏற்பட்டு அவை இறக்கவில்லை என்று ஆய்வு செய்த நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றைய காலநிலையில் சற்று மாற்றம் ஏற்பட்டு வெப்பம் குறைவடைந்துள்ளது. ஆனால் இனிவரும் நாள்களில் மீண்டும் வெப்பம் அதிகரிக்கக்கூடும்.


அதனால் குறிப்பிட்ட ஒருபகுதி அதாவது நந்திக்கடல்–வட்டுவாகல் பகுதியில் உயிருடன் காணப்படும் ஆயிரக்கணக்கான மீன்கள் மீண்டும் இறந்து விட வாய்ப்பு இருக்கின்றது.

அதனால் அங்குள்ள மீன்களை பிடித்து சந்தைப்படுத்தி வருகின்றோம் நேற்றுக் காலை தொடக்கம் நண்பகல் வரை சுமார் 2 ஆயிரம் கிலோ வரையிலீ மீன்களை சந்தைப்படுத்தியுள்ளோம். – என்றனர். (இ)





நல்லூர் கந்தசுவாமி கோயில் ஸ்ரீ ஷண்முக இராஜகோபுர கலசாபிஷேகம் நேற்று இடம்பெற்றபோது...




# 116 பேருடன் மாயமான மியன்மாரின் விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிப்பு!

## அந்தமான் கடற்பகுதியில்!!

யாங்கூன், ஜூன் 08

மியன்மாரில் 116 பேருடன் சென்ற இராணுவ விமானம் திடீரென்று தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு மாயமானதாக முதற்கட்டத்தகவல் வெளியாகியுள்ளது.

மியன்மாரின் இராணுவத் தளபதி இந்தச் செய்தியை உறுதிப்படுத்தி உள்ளார்.

மியன்மாரின் மையிக் மற்றும் யாங்கூன் இடையே இந்த விமானம் மாயமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் மேக் மற்றும் யாங்கோனுக்கு இடையே சென்ற போது விமானம் ராடர் சிக்னலில் இருந்து மறைந்தது.

தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து விமானிகளைத் தொடர்பு கொள்ள முடியாமல் போனதாய் அதிகாரிகள் அதிர்ச்சியும் பதற்றமும் அடைந்தனர்.

விமானத்தை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 1.35 மணிக்கு தாவே நகருக்கு மேற்கே 20 மைல்கள் தொலைவில் சென்றபோது விமானத்தின் தகவல் தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டதாகவும், விமானத்தைத் தேடும் பணி நடைபெற்றுவருவதாகவும் இராணுவத் தலைமைத் தளபதி அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

காணாமல் போன விமானத்தில் 105 பயணிகளும், 11 விமான ஊழியர்களும் இருந்தனர் என்று விமானநிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ–ச)

*இந்த விமானத்தின் உதிரிப் பாகங்கள் மற்றும் சிதைவுகள் அந்தமான்தீவின் கடற்பகுதியில் காணப்பட்டன என்றும் பின்னர் தெரியவந்தது.*

**பிந்திய செய்தி:**

**கடலில் தேடுதல் நடத்தியதில் 15 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்று நேற்று முன்னிரவு தகவல் வெளியாகி இருந்தது.**

## அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

அமைச்சுக்கள் சிலவற்றுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி சுகாதார அமைச்சின் செயலாளராக உதய ஆர். செனவிரத்னவும், பெற்றோலியத்துறை அமைச்சின் செயலாளராக உபாலி மாரசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகாவலி அமைச்சின் செயலாளராக அநுர திஸாநாயக்க, நீர்ப்பாசனத்துறை அமைச்சின் செயலாளராக ஜயந்த விஜயரத்ன மற்றும் தொழிலாளர் அமைச்சின் செயலாளராக என்.சரணதிஸ்ஸ ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

# அடைக்கப்பட்ட குடிதண்ணீர் போத்தலில் பிளாஸ்ரிக் துண்டுகள்

குடிதண்ணீர் போத்தலினுள் பிளாஸ்ரிக் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் வவுனியா பொது சுகாதார பரிசோதகர் அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வவுனியா நகரில் விற்பனை நிலையமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள குடிதண்ணீர் போத்தலினுள் இந்த பிளாஸ்ரிக் துண்டுகள் இருந்தன என்று தெரியவந்துள்ளது.

அதனைக் கொள்வனவு செய்தவர் அந்த நிறுவனத்திற்கு இது தொடர்பில் தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளார். ஆனால் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் தம்மை பதிலுக்குத் திட்டினார் என்று நுகர்வோர் தெரிவித்துள்ளார். (இ–100)

# வவுனியா மரக்காலையில் திருட்டு: காட்டிக் கொடுத்தது சீ.சீ.ரீ.வி. கமரா!

வவுனியா, கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள மரக்காலை ஒன்றில் கடந்த திங்கட்கிழமை மாலை திருட்டில் ஈடுபட்ட இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வந்தவை வருமாறு:–

வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் உள்ள மரக்காலை ஒன்றில் வேலை செய்த இருவர் உரிமையாளர் வெளியில் சென்றிருந்த சமயம் பெட்டகத்தை உடைத்து ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பணத்தினைத் திருடியுள்ளனர்.

உரிமையாளர் மீண்டும் வந்து பார்த்த போது பெட்டகம் உடைக்கப்பட்டிருந்தது. இவ் விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது அதை அடுத்து அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கருவியை (சீ.சீ.ரீ.வி.) பரிசீலித்த பொலிஸார், அங்கு பணி புரியும் இருவரை இச் சம்பவம் தொடர்பில் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் ரூபா பணம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளைகளின் பின்னர் இருவரையும் – வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (இ–100)

# முஸ்லிம் வர்த்தகரின் கடைக்குத் தீ!



மஹரகம நகரில் இயங்கி வந்த முஸ்லிம் வர்த்தகர் ஒரு வருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் எரியூட்டப்பட்டுள்ளது. ஹைலெவல் வீதியில் உள்ள வர்த்தக நிலையமே தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. (இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.